## தோட்டக்கலைப் பயிர்களை அதிக அளவில் பயிரிட வலியுறுத்தல்

First Published : 22 Feb 2010 06:35:10 AM IST

திருவாரூர், பிப். 21: தோட்டக்கலைப் பயிர்களை அதிகளவில் பயிரிட விவசாயிகள் முன்வர வேண்டும் என்றார் திருவாரூர் மாவட்ட ஆட்சியர் எம். சந்திரசேகரன்.

திருவாரூர் மாவட்ட தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை சார்பில் தோட்டக்கலை கண்காட்சி மற்றும் மூங்கில் சாகுபடி குறித்த கருத்தரங்கம் திருவாரூரில் நடைபெற்றது.

கண்காட்சியைத் தொடக்கிவைத்து ஆட்சியர் பேசியது: தோட்டக்கலைத் துறை விவசாயம் என்பது விவசாயிகளுக்கு லாபம் தரும் தொழில் என்பதைவிடவும், புவியைக் காக்கவும் ஒரு உதவியாக இதை மேற்கொள்ளலாம். தோட்டக்கலைப் பயிர்களை பெரிய அளவில் தான் மேற்கொள்ள வேண்டுமென்பதில்லை, குறைந்த இடத்திலும் அனைவருக்கும் உற்பத்தி என்ற கொள்கையுடன் மேற்கொள்ளலாம். திருவாரூர் மாவட்டத்தில் 1.80 லட்சம் ஹெக்டேர் சாகுபடி நிலப்பரப்பு உள்ளது. இதில் 955 ஹெக்டேரில் தான் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. இதிலும் 500 ஹெக்டேரில் காய்கறிகள், 300 ஹெக்டேரில் பழங்கள் மற்றும் 155 ஹெக்டேரில் மலைத்தோட்டப் பயிர்களும் சாகுபடி செய்யப்படுகின்றன.

தமிழக அரசு தோட்டக்கலைத் துறையை மேம்படுத்தும் நோக்கில் உழவர் சந்தையை ஏற்படுò்த்தி, காய்கறிகள் உற்பத்தியாகும் இடத்திலிருந்து விவசாயிகள் சந்தைக்குக் கொண்டு வர பேருந்து வசதி, சந்தை வசதி ஆகியவற்றை இலவசமாக செய்து தந்துள்ளது. இதைப் பயன்படுத்தி தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடியை விவசாயிகள் அதிக அளவில் சாகுபடி செய்து, தொழில் ரீதியாக உரிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தினால், அரசு அளிக்கும் பல்வேறு மானியம் உள்ளிட்ட சலுகைகளையும் பெறலாம் என்றார் ஆட்சியர். விழாவில் வேளாண் இணை இயக்குநர் சொ. அன்பழகன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) மு. கபிலன், குரோமோர் பயோடெக் நிறுவன உதவிப் பொது மேலாளர் ராஜி, கால்நடைத்துறை உதவி இயக்குநர் பழனியப்பன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். தோட்டக்கலைத்துறை சார்பில் அரங்குகள் அமைக்கப்பட்டு, பல்வேறு தோட்டக்கலைப் பயிர்கள் குறித்த கண்காட்சியும், செயல் விளக்கமும் செய்து காட்டப்பட்டது.

## வேளாண்மைக் கருத்தரங்கு

First Published : 22 Feb 2010 01:20:55 AM IST

ஸ்ரீவைகுண்டம்,பிப்.21:ஆழ்வார்திருநகரி மதர் பாரா மெடிக்கல் நர்சிங் கல்லூரியில் வேளாண் துறை சார்பில் கருத்தரங்கு நடைபெற்றது. இதில், வேளாண்மை துணை அலுவலர் தர்மராஜ் மரம் வளர்ப்பு மற்றும் மரக்கன்று நடுதல் குறித்து பேசினார். ஆழ்வார்திருநகரி பேரூராட்சித் தலைவர் ஆதிநாதன் தலைமை வகித்தார்.கருத்தரங்கில் ராஜப்பா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். அல் அமீன் அறக்கட்டளை நிறுவனர் ஷேக்காஜா முஹைதீன் நன்றி கூறினார்.

## விவசாய உற்பத்தியாளர்கள் ஆலோசனை

First Published : 22 Feb 2010 02:01:02 AM IST

தருமபுரி, பிப். 21: தருமபுரி மாவட்ட விவசாய உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பின் சார்பில் மாநில அளவிலான ஆலோசனைக் கூட்டம் தருமபுரியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

தருமபுரி ரோட்டரி சங்கக் கட்டடத்தில் நடைபெற்ற கூட்டத்துக்கு, கூட்டமைப்பின் தலைவர் வி.எம்.வெங்கடேசன் தலைமை தாங்கினார்.

விவசாய தொழில் மேம்பாட்டு நுட்பம் குறித்து வேளாண்மை அலுவலர் இரா.மாதவன் பேசினார்.

விவசாய உற்பத்தியாளர்களின் தொழில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது, முறையாக விவசாய உற்பத்தியாளர்களின் தொழில் கூட்டமைப்பு ஏற்படுத்துவது, உற்பத்தியாளர்ளின் மேம்பாட்டுக்காக புதிய தொழிற்சாலைகளை உருவாக்குவது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

## சுயஉதவிக் குழுக்களுக்கு இயற்கை உரம் தயாரிப்பு பயிற்சி

First Published : 22 Feb 2010 01:54:14 AM IST

அரக்கோணம், பிப் 21: அரக்கோணத்தை அடுத்த கீழ்ப்பாக்கத்தில் சுயஉதவிக் குழுக்களுக்கு இயற்கை உரம் தயாரிக்கும் பயிற்சி முகாம் நடை
பெற்றது.

இம்முகாமை, அரக்கோணம் டாசா சமூக சேவை தொண்டு நிறுவனம் சி.பி.ஆர். சுற்றுச் சூழல் கல்வி மையத்துடன் இணைந்து வெள்ளி மற்றும் சனிக்கிழமை நடத்தின. முகாம் தொடக்க நிகழ்ச்சிக்கு, டாசா நிறுவனச் செயலர் ஜோதிலட்சுமிó தலைமை தாங்கினார். கீழ்ப்பாக்கம் தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியர் ஜெயசீலன், வேளாண் அலுவலர் மகேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். ஆண்கள் மற்றும் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு செயல்முறை விளக்கங்களுடன் இயற்கை உரம் தயாரித்தல், மண்புழு தயாரித்தல் ஆகியவற்றுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. டாசா நிறுவன இயக்குநர் கோட்டீஸ்வரன், களப்பணியாளர் ஸ்டெல்லா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## புதுகை விவசாயிகள் கற்றறிவுப் பயணம்

First Published : 22 Feb 2010 06:41:50 AM IST

புதுக்கோட்டை, பிப். 21: தோட்டக் கலைத் துறை மூலம் புதுக்கோட்டை வட்டார விவசாயிகள் அண்மையில் கோவைக்கு கற்றறிவுப் பயணம் சென்று வந்தனர்.

தோட்டக் கலைத் துறையினர் ஏற்பாடு செய்திருந்த இந்த பயணத்தில் கோவை வேளாண் பல்கலைக்கழகத்தின் பழத் தோட்டம், வாழைத் தோட்டம், காய்கறி பயிர்கள், தாவரவியல் பூங்காவில் உள்ள மலர் தோட்டம், தீவனப்புல் வகைக ளின் சாகுபடி தொழில்நுட்பங்களை தோட்டக் கலைத் துறை அதிகாரி பரமகுரு விவசாயிகளுக்கு விளக்கினார்.

தொடர்ந்து மேட்டுப்பாளையத்தில் உள்ள குளிர்ப்பதன கிடங்கில் ஆப்பிள், உருளைக்கிழங்கு உள்ளிட்ட பலவகை விளை பொருள்களை முறையாகச் சேமித்து வைத்திருப்பதையும், அரசு மானியத்தில் அமைக்கப்பட்டுள்ள அந்த கிடங் கில், நல்ல விலை வரும் வரை குறைந்த வாடகையில் விவசாயிகளுக்கு அறைகள் அளிக்கப்படுவதையும் அறிந்து கொண்டனர்.

மேலும், கல்லாறு, பரளியாறு அரசு தோட்டக் கலை பண்ணைகள், ஊட்டி ரோஜாத்தோட்டம், தாவரவியல் பூங்காவை யும் விவசாயிகள் பார்வையிட்டனர்.

பழனி செம்பட்டி சாலையில் மிளகாய் பயிரில் ஊடுபயிராக வெங்காயம் சாகுபடி செய்யும் செயல்விளக்கம், விவசாயி நாச்சம்மை தோட்டத்தில் சாமந்தி, திண்டுக்கல் அரளி சாகுபடி, இயற்கை பண்ணை அடிப்படையில் முழு அளவில் சொட்டு நீர் பாசன முறையில் டாக்டர் ராஜேஸ்வரன் அமைத்துள்ள பழத்தோட்டம், நர்சரி தோட்டம், மாந்தோப்பின்

ஊடே நெல்லி, சப்போட்டாவின் ஊடே நெல்லி, நெல்லியின் ஊடே எலுமிச்சை ஆகியவற்றின் சாகுபடி, ஒட்டுப்பலா, மண்புழு உரம், கொய்யாத் தோப்பு ஆகியவற்றையும் விவசாயிகள் பார்வையிட்டனர்.

தொடர்ந்து, பெரியகுளம் தோட்டக் கலை கல்லூரியில் பல்வேறு பயிர்களின் புதிய ரகங்கள், 65 வகை மூலிகைத் தோட்டம் ஆகியவற்றையும் விவசாயிகள் பார்வையிட்டனர்.

ஏற்பாடுகளை தோட்டக் கலை துணை இயக்குநர் பி. ராஜுவின் அறிவுரையின் பேரில், உதவி இயக்குநர் தி.சு. பால சுப்பிரமணியன், உதவி அலுவலர்கள் மு. கணேசன், துரைஅருளானந்தம், ஆர். செல்வம், இ. மகாலிங்கம் ஆகியோர் செய்திருந்தனர்.

**தேங்காய் விற்பனை நிலையமாக மாறிய உழவர் சந்தை**

First Published : 22 Feb 2010 03:28:19 AM IST

போடி, பிப். 21: போடி உழவர் சந்தை செயல்படாததால், தேங்காய் விற்பனை நிலையமாக மாறியுள்ளது.

விவசாயிகள் உற்பத்தி செய்யும் காய்கறிகள் உள்ளிட்ட விளைபொருள்களை மக்கள் நேரடியாக குறைந்த விலைக்கு வாங்கிப் பயன்பெறும் வகையில், உழவர் சந்தை திட்டம் கொண்டுவரப்பட்டது. இத்திட்டம் பொதுமக்கள் மத்தியில் வரவேற்பை பெற்றது.

போடி நகரிலும் உழவர் சந்தை கடந்த 2000-ம் ஆண்டில் திறக்கப்பட்டது. இங்கு 40 கடைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த உழவர் சந்தையில் வியாபாரம் செய்ய 600 விவசாயிகள் பதிவு செய்தனர். இவர்கள் தங்கள் விளைபொருள்களை கொண்டு வர சிறப்பு பஸ்கள் இயக்கப்பட்டன.

நகரின் வடமேற்குப் பகுதியில் ஊருக்கு வெளிப்பகுதியில் இந்த உழவர் சந்தை அமைக்கப்பட்டது. இதனால் நகரின் மையப் பகுதியிலிருந்து 3 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டி இருந்தது. மேலும் போக்குவரத்து வசதியும் இல்லை. இதனால் நாளடைவில் பொதுமக்கள் உழவர் சந்தைக்கு செல்வதைத் தவிர்த்து, நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள தினசரி மார்க்கெட்டுக்கு சென்றனர்.

இதனால் உழவர் சந்தையில் பொருள்கள் விற்பனையாகாமல் தேங்கும் நிலை ஏற்பட்டதால், உழவர் சந்தைக்கு வருவதை விவசாயிகள் தவிர்த்தனர். இதனால் 40 கடைகளில் நடைபெற்று வந்த வியாபாரம் 5 கடைகளாகக் குறைந்து, தற்போது விவசாயிகள் வருவதே இல்லை என்ற நிலை உருவானது.

தற்போது காலியாக உள்ள உழவர் சந்தையில், சில விவசாயிகள் தங்கள் தென்னை நெற்றுகளை குவித்து வைத்து, அவற்றை உரித்து தேங்காய் எடுத்து மொத்தமாகவும், சில்லரையாவும் விற்பனை செய்து வருகின்றனர்.

இதேபோல் மாங்காய் சீசனிலும் மாங்காய்களை விற்பனைக்கு அனுமதிக்க உழவர் சந்தை அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்.

இந்த உழவர் சந்தையை நகரின் மையப் பகுதிக்கு மாற்ற, மாவட்ட ஆட்சியர் பூ.முத்துவீரன் நடவடிக்கை எடுத்தார். அதன்படி நகராட்சி பழைய இறைச்சிக் கூடம் செயல்பட்ட இடத்தில், உழவர் சந்தை கட்ட இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, நகராட்சி நிர்வாகம் தீர்மானம் நிறைவேற்றியது. ஆனால், சென்னையில் உள்ள நகராட்சி இயக்குநர் அலுவலகத்திலிருந்து இதற்கு ஒப்புதல் வராததால், உழவர் சந்தை மாற்றும் பணியில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து போடி உழவர் சந்தை வேளாண் விற்பனை துறை துணை இயக்குநர் ராஜன் கூறியது:

பொதுமக்கள் உழவர் சந்தைக்கு வராததால் விவசாயிகளும் வருவதில்லை. இதனால் தற்போது உழவர் சந்தை செயல்படாமல் உள்ளது. இதனால், தேங்காய் விற்பனைக்கு அனுமதித்துள்ளோம். இதேபோல் மாங்காய் சீசனில் மாங்காய்களை இங்கு கொண்டுவந்து விற்க மா விவசாயிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம்.

இந்த உழவர் சந்தையை போடி நகரின் மையப் பகுதிக்கு மாற்றி கட்டடம் கட்ட அரசு ரூ.22 லட்சம் ஒதுக்கியுள்ளது. இதுகுறித்து மாநில வேளாண் விற்பனை வாரிய தலைவர் அக்ரி கணேசன், போடி உழவர் சந்தையை ஆய்வு செய்து சென்றார். நகராட்சி இடம் கிடைத்தவுடன் கட்டடப் பணிகள் முடிவடைந்து உழவர் சந்தை செயல்படும் என்றார்.

தினமலர்

## டெல்டா பகுதிகளில் நெல் அமோக விளைச்சல்: பதுக்கல் வியாபாரிகள் கடும் பீதி

சேலம்:தமிழகத்தில் டெல்டா மாவட்டங்கள் உட்பட அனைத்து மாவட்டங்களிலும் நெல் விளைச்சல் எதிர்பார்த்ததை விட பல மடங்கு அதிகரித்துள்ளதால், விலையில் திடீர் சரிவு ஏற்பட்டுள்ளது. இந்த விலை சரிவு, நெல்லை பதுக்கி வைத்திருக்கும் வியாபாரிகள் மத்தியில் கடும் பீதியை ஏற்படுத்தி உள்ளது.தமிழகத்தின் செங்கம், செஞ்சி, குடியாத்தம், திருவாரூர், செங்கல்பட்டு, கள்ளக்குறிச்சி, தஞ்சாவூர் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்கள் உட்பட அனைத்து பகுதிகளிலும் தற்போது நெல் அறுவடை துவங்கி நடந்து வருகிறது.இப்பகுதியில் கடந்த ஆண்டை விட, நடப்பு ஆண்டு நெல் விளைச்சல், விவசாயிகள் எதிர்பார்த்ததை விட பல மடங்கு அதிகரித்துள்ளது.

இப்பகுதிகளில் செயல்பட்டு வரும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், தனியார் நெல் மண்டிகளுக்கு தினந்தோறும் 5,000 முதல் 10 ஆயிரம் டன் வரையிலான நெல் மூட்டைகள் விற்பனைக்கு வருகின்றன.விளைச்சல் அதிகரித்து விற்பனைக்கு வரும் நெல்லின் வரத்து அதிகரித்ததால் வெள்ளை பொன்னி, பி.பி.டி., (பாபத்லால் பொன்னி) ஏ.டி.டி., 37 ரக நெல்களின் விலையில் திடீர் சரிவு ஏற்பட்டுள்ளது.இந்த நெல் ரகங்கள் தற்போது எதிர்பார்த்ததை விட அதிக அளவில் விற்பனைக்கு வருவதால், நெல் மூட்டைக்கு 100 முதல் 200 ரூபாய் வரை சரிவு ஏற்பட்டுள்ளது.இந்த விலை சரிவு நெல்லை வாங்கி அரிசி தயாரிக்கும் போது, அதன் விலையிலும் எதிரொலித்து கிலோ 2 முதல் 3 ரூபாய் வரை சரிவு ஏற்பட்டுள்ளது. கடந்த வாரம் புதிய பொன்னி நெல் 75 கிலோ மூட்டை 1,100 ரூபாய்க்கு விற்றது 1,000 ரூபாய்க்கும், பி.பி.டி., ரக நெல் 62 கிலோ மூட்டை 850லிருந்து 800 ரூபாய்க்கும் விற்கிறது.ஏ.டி.டி., 37 ரக நெல் 75 கிலோ மூட்டை 950க்கு விற்றது 825 ரூபாய்க்கு விற்கிறது.

இதன் காரணமாக அரிசி விலையும் சரிவை சந்தித்துள்ளது.கடந்த வாரம் வெள்ளை பொன்னி அரிசி, 75 கிலோ மூட்டை 2,500க்கு விற்றது, 2,400 ரூபாய்க்கும், பி.பி.டி., ரக அரிசி 1,900க்கு விற்றது, 1,800 ரூபாய்க்கும், ஏ.டி.டி., 37 ரக அரிசி 1,550க்கு விற்றது, 1,350 ரூபாய்க்கும் விற்கிறது.இன்றைய அளவில் அரிசி நிலவரம், பி.பி.டி., ரக அரிசி 24.60 ரூபாய், ஏ.டி.டி., 37 ரக அரிசி 18 ரூபாய், வெள்ளை பொன்னி 32 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. வரத்து அதிகரித்துள்ள நெல் ரகங்களின் அரிசி விலையில் மட்டுமின்றி பிற ரக அரிசி விலையிலும் சரிவு ஏற்பட்டுள்ளது.வெள்ளை பொன்னி பழசு 38க்கு விற்றது 37 ரூபாய்க்கும், கிராந்தி 26 ரூபாய்க்கும், கிண்டி கார் ரக அரிசி 25 ரூபாய்க்கும் விற்கிறது.

இது குறித்து தமிழக அரிசி ஆலை உரிமையாளர்கள், நெல், அரிசி வணிக சம்மேளனத்தின் துணைத்தலைவர் சியாமளநாதன் கூறியதாவது:தமிழகத்தின் நெற்களஞ்சியமான டெல்டா மாவட்டங்கள், செஞ்சி, கள்ளக்குறிச்சி உட்பட அனைத்து பகுதிகளிலும் நெல்லின் விளைச்சல் எதிர்பார்த்ததை விட பல மடங்கு அதிகரித்துள்ளதால், நெல்லை தற்போது விவசாயிகள் விற்பனை செய்து வருகின்றனர். அதனால், தமிழகத்தில் அனைத்து ரக அரிசியின் விலையிலும் திடீர் சரிவு ஏற்பட்டுள்ளது.தற்போது நெல் அறுவடை நடந்து வருவதால், இன்னும் மூன்று மாத காலத்துக்கு நெல் அதிகளவில் விற்பனைக்கு வந்து கொண்டு இருக்கும். அதனால் நெல் விலை தொடர்ந்து இதே நிலையில் இருந்தால், அரிசி விலையும் தொடர்ந்து இதே நிலையில் நீடிக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.இவ்வாறு சியாமளநாதன் கூறினார்.

## பொள்ளாச்சியில் பெல்லாரி வெங்காயம் விலை சரிவு

பொள்ளாச்சி : பொள்ளாச்சி காந்தி மார்க்கெட் டிற்கு பெல்லாரி வெங்காயத்தின் வரத்து அதிகரித்திருப்பதால் விலையில் சரிவு ஏற்பட்டது.

மகாராஷ்டிரா பகுதியில் விவசாயிகள் இம்முறை பெல்லாரி வெங்காயத்தில் உயர்தரமான வெங்காயத்தை பயிரிடுட்டுள்ளதால், விளைச்சல் அதிகமாகியுள்ளது. இங்கிருந்து பொள்ளாச்சி சந்தைக்கு அதிகளவில் வெங்காயம் வந்துள்ளது. பொள்ளாச்சி சந்தைக்கு தினமும் 300 டன் வரை வரத்துள்ளது. இதில், 200 டன் கேரளாவில் திருச்சூர், வடக்கஞ்சேரி, பாலக்காடு, கொடுவாயூர், கோட்டபுரம் உள்ளிட்ட பகுதிகளுக்கும் அனுப்பப் படுகிறது. மீதமுள்ள 100 டன்கள் பொள்ளாச்சி சந்தையில் விற்பனையாகிறது. நேற்று முன்தினம் ஒருகிலோ வெங்காயத்தின் விலை கிலோ 18 ரூபாய்க்கு விற்றது. நேற்று 14 ரூபாய்க்கு விற்பனையானது.

பொள்ளாச்சி வியாபாரிகள் கூறியதாவது: மகாராஷ்டிரா மாநிலத்தில் பெல்லாரி வெங்காய சீசன் ஆகஸ்ட் மாதம் வரை நடக்கும். அதன்பின், ஜல்லிபட்டி பகுதியிலிருந்து, செப்டம்பர் மாதம் கர்நாடகாவிலிருந்து வெங்காயம் வரத்திருக்கும். கடந்த வாரத்தை விட இந்த வாரம் வரத்து அதிகரித்துள்ளதால், விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. இனி, வரும் வாரங்களில் விலை மேலும் சரியும் வாய்ப்புள்ளது என்றனர்.

### மணிலாவில் நல்ல மகசூல் பெற மானிய விலையில் ஜிப்சம் உரம்

சிதம்பரம் : மணிலா பயிரில் நல்ல மகசூல் பெற 50 சதவீத மானிய விலையில் ஜிப்சம் உரம் விற்பனை செய்யப்படுவதாக வேளாண் அதிகாரி அறிவித்துள்ளார்.
இதுகுறித்து கீரப்பாளையம் வட்டார வேளாண் உதவி இயக்குனர் விஜயகுமார் விடுத்துள்ள செய்திகுறிப்பு: சிதம்பரம் அருகே கீரப்பாளையம் வட்டாரத்தில் செயல்படுத்தப்படும் தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டங்களில் விவசாயிகள் நலனுக்காக ஜிப்சம் 50 சதவீத மானிய விலையில் கீரப்பாளையம் நந்தீஸ்வரம் வேளாண் விரிவாக்க மையங்களில் விற்பனை செய்யப்படுகிறது.
எண்ணை வித்து பயிருக்கு எக்டேருக்கு 200 கிலோவும், பயறு வகைகளுக்கு 110 கிலோவும் 50 சதவீத மானியத்தில் வழங்கப்படுகிறது. ஜிப்சம் மணிலாவுக்கு இடுவதால் மணிலாவில் விழுதுகள்  நன்கு உருவாகவும், காய்கள் திரட்சியாகவும் இருக்கும். எனவே மணிலாவில் ஜிப்சம் போட்டு அதிக மகசூல் பெற்று விவசாயிகள் பயனடையலாம். இவ்வாறு செய்தி குறிப்பில் கூறப் பட்டுள்ளது.

### தழைச்சத்து விதையினை குறைந்த விலையில் வழங்க வேண்டும்: கலெக்டருக்கு கோரிக்கை

திட்டக்குடி : தழைச்சத்து உரப்பயிர் விதைகள் வேளாண்துறை மூலம் குறைந்த விலை யில் வழங்கிட கலெக் டரிடம் முறையிடப்பட்டது.
இது குறித்து வேளாண் உற்பத்திக்குழு உறுப்பினர் திட்டக்குடி வேணு கோபால், கலெக்டரிடம் நேரில் முறையிட்டுள்ளதாவது: விவசாய பணிகளுக்கு ரசாயன உரங்களை பயன் படுத்துவதால் மண் மலட்டுத் தன்மை ஏற்படு கிறது. உரங்களை குறைக்க இயற்கை முறை யில் தழைச்சத்தினை ஏற்படுத்தும் தழை உரப்பயிரான "தக்கை சனப்பை பூண்டு' விதைகள் பயன் பட்டது. இதன் மூலம் மண்ணில் இயற்கையான தழைச் சத்தும், தேவையான ஊட்டமும், மண் வளமும் அதிகரிக்கிறது. கடந்த ஆறு மாதங்களுக்கு முன் ஒரு கிலோ 24 முதல் 26 ரூபாய் வரை விற்கப்பட்ட இவ்விதைகள், தற்போது இரு மடங்கு விலையேற் றம் அடைந்துள்ளது. இதனால் விவசாயிகள் அதிகளவு பாதிக்கின்றனர். எனவே வேளாண் துறை மூலம் குறைந்த விலையில் தழைச்சத்து உர விதைகளை வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.   இது குறித்து வேளாண் அதிகாரிகளுடன் பரிசீ லித்து உரிய நடவடிக்கை எடுப்பதாக கலெக்டர் உறுதியளித்தார்.

### கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம்

கடலூர் : கடலூர் அடுத்த கோதண் டராமபுரத்தில் கால்நடை மருத்துவ முகாம் நடந்தது.
ஊராட்சி தலைவர் சிவக்குமார் தலைமை தாங்கினார். துணைத் தலைவர் மதுரவாணன் முன் னிலை வகித்தார். கால் நடை துறை மண்டல இணை இயக்குனர் நடேசன் முகாமை துவக்கி வைத்தார். திருப்பாதிரிப்புலியூர் கால்நடை உதவி மருத்துவர் மோகன் குமார் தலைமையிலான குழுவி னர் சிகிச்சை அளித்தனர். முகாமில் 20 கால்நடைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல், 2 மலடு நீக்க சிகிச்சை, 136 சினை பரிசோதனை, 360 ஆட்டுக் குட்டிகளுக்கு குடற்புழு நீக்கம், 466 கால்நடைகளுக்கு தடுப்பூசி என 1,164 கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

### விதை கிராம பயிற்சி

காட்டுமன்னார்கோவில் : காட்டுமன்னார்கோவில் அடுத்த சித்தமல்லியில் விதை கிராம பயிற்சி முகாம் நடந்தது. காட்டுமன்னார்கோவில் அடுத்த சித்தமல்லி கிராமத்தில் விவசாயிகளுக்கு எண்ணை வித்துக் களுக்கான விதை கிராம பயிற்சி முகாம் நடந்தது. விதைகள் அதிக அளவு விலைக்கு விற்கப்படுவதால் விவசாயிகள் பாதிப்பு குறித்தும், விவசாயிகள் தாங்களாகவே விதை உற்பத்தியை செய்து கொள்வது குறித் தும், தரமான நிலையில் விதை உற்பத்தியை அதிகப்படுத்தி பயனடைவது குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. ஊராட்சி தலைவர் நாகராஜன் தலைமை தாங்கினார். வேளாண் அலுவலகர் மதிவாணன் முன்னிலை வகித்தார். உதவி வேளாண் அலுவலர் ஆனந்தன், அருள், லட்சுமணன் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர்.

### பருவ நிலை மாற்றத்தால் மலர்ச்செடிகள் வளர்ச்சி பாதிப்பு

கொடைக்கானல் : பருவநிலை மாற்றத் தால் மலர்கண்காட்சிக் கான செடிகள் வளர்ச்சியின்றி காணப்படுகிறது.
கொடைக்கானலில் தோட்டக்கலைத்துறை சார்பில் 49 வது மலர்க் கண்காட்சிக்காக பிரையண்ட் பூங்கா, செட்டியார் பூங்காவில் மூன்று லட்சத் திற்கும் மேற்பட்ட நாற்றுக் கள் (33 வகை) கடந்த ஆண்டு டிச., முதல் வாரத் தில் நடவு செய்யப்பட் டது. வழக்கமாக ஜன., பிப்., மாதங்களில் மழைபெய்யும். இந்தாண்டு பகலில் நிலவும் வெயில், இரவில் நிலவும் கடுங்குளிரால் செடிகளை காப்பாற்ற பல்வேறு முயற்சி மேற் கொண்டாலும், தற்போது வரை இரண்டு அடிக்கு மேல் வளர வேண்டிய செடிகள் குறைவாக வளர்ந் துள்ளது. மே மாதத்தில் பூக்கள் பூத்துக்குலுங்குமா என்ற கேள்வி எழுந் துள்ளது.
தோட்டக்கலைத்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், "செடிகள் நடவிற்கு பிறகு, வழக்கமான பருவமழை இல்லாததாலும்,பகலில் 18 டிகிரி செல்சியசுக்கு மேல் வெயிலும், இரவில் 6 டிகிரி செல்சியஸ் என பனி நிலவுவதால், செடிகளின் வளர்ச்சி குன்றியுள்ளது. இருப்பினும், 4 நாட்களுக்கு ஒருமுறை தண்ணீரும், ரசாயன உரங்களை இட்டு நாற்றுக்களை தேற் றும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறோம்' என்றார்.

### ஒரு தலை இரு உடலுடன் அதிசய ஆட்டுக்குட்டி

குஜிலியம்பாறை : வேடசந்தூர் அருகே உள்ள அழகாபுரியை சேர்ந்தவர் பெரியசாமி. விவசாயியான இவர், சில ஆடுகளையும் வளர்த்து வருகிறார். நேற்று இவரது ஆடு ஒன்று குட்டி போட் டதில், முதல் குட்டி நன்றாக வந் தது. இரண்டாவது குட்டிக்கு, தலை வெளியே வந்து வெகுநேரமாகியும் உடல் வெளியே வராததால், ஆடு கத்திக்கொண்டே இருந்தது. சிறிது நேர இடைவெளிக்கு பிறகு ஒரு தலை, இரண்டு உடம்பு, 8 -கால்கள், 3-காதுகளுடன் அதிசய ஆட்டுக்குட்டி வெளியே வந்தது. வெளியே வந்த ஆட்டுக்குட்டி சிறிது நேரத்திலேயே இறந்தது.

### நெல் நாற்று நடவு இயந்திரம் மானியத்தில் விற்பனை: வேளாண் பொறியியல் துறையை அணுகலாம்

ஈரோடு: விவசாயப் பணிக்கு ஆட்கள் பற்றாக்குறையை சமாளிப்பதற்காக நெல் நாற்று நடவு இயந்திரம் ஈரோடு மாவட்டத்தில் வேளாண் பொறியியல் துறை சார்பில் மானியத்தில் வழங்கப்படுகிறது.ஈரோடு மாவட்டத்தில் கரும்பு, வாழை, மஞ்சள், நெல் மற்றும் பல்வேறு பயிர்கள் பயிரிடப்படுகின்றன. ஈரோடு மாவட்டம் மற்றும் அருகில் உள்ள திருப்பூர் நகரத்தில் தொழில் வளம் முன்னேற்றம் கண்டுள்ளதால் பலர் விவசாயத்தை கைவிட்டு விட்டு தொழிற்சாலைகளுக்கு சென்று வருகின்றனர். விவசாய பணிகளுக்கான கூலியை விட, பனியன் கம்பெனிகளில் அதிகளவு சம்பளம் கிடைப்பதால் பலர் தொழிற்சாலைகளுக்கு சென்று விடுகின்றனர். இதனால், விவசாய பணிகளுக்கு ஆட்கள் கிடைக்காமல் அவதிப்படுகின்றனர்.இல்லையென்றால், அதிகளவு கூலியை கொடுக்க வேண்டிய நிலை விவசாயிகளுக்கு ஏற்படுகிறது. இந்நிலையில் இருந்து மாற அரசின் வேளாண் பொறியியல் துறை மற்றும் வேளாண் துறை சார்பில் பல்வேறு மானியத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றனர். விவசாயத்தில் நவீன இயந்திரங்கள் படிப்படியாக புகுத்தப்பட்டு வருகின்றன.

இதுபோன்ற வாய்ப்புகளை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில், ஈரோடு பிரப் சாலையில் உள்ள வேளாண் பொறியியல்துறை உபகோட்ட உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் விவசாயிகளுக்கான செயல்விளக்க முகாம் உபகோட்ட உதவி செயற்பொறியாளர் வெற்றிவேலன் தலைமையில் நடந்தது. ஈரோடு வேளாண் பொறியியல் துறை உபகோட்ட இளநிலை பொறியாளர் பழனிச்சாமி முன்னிலை வகித்தார். நெல் நாற்று நடவு செய்வது குறித்து விவசாயிகள் அறிந்து கொண்டனர்.ஈரோடு வேளாண் பொறியியல் துறை உபகோட்ட உதவி செயற்பொறியாளர் வெற்றிவேலன் கூறியதாவது:

விவசாயத்தில் ஆட்கள் பற்றாக்குறையை சமாளிப்பதற்காக நெல் நாற்று நடவு செய்யும் இயந்திரம் தமிழக அரசின் சார்பில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. விவசாய பணிகளுக்கு ஆட்கள் கிடைப்பது என்பது அரிதாகி வருகிறது. வருங்காலத்தில் இந்த பிரச்னை மேலும் அதிகமாகும். எனவே, விவசாயிகள் நெல் நாற்று நடவு இயந்திரத்தை மானியத்தில் வாங்கலாம். தற்போது இதுதொடர்பான செயல் விளக்கம் வைராபாளையம், காலிங்கராயன் பாளையம், தாராபுரம் உட்பட பல பகுதிகளில் நடந்து வருகிறது.முதலில் பாயில் நெல் நாற்று வைத்திருக்க வேண்டும். ஒரு இன்ச் மண் போட்டு கேக், கேக்காக வெட்டி அடுக்க வேண்டும். பின்னர், 15 நாள் கழித்து நாற்றுகளை நெல் நாற்று நடவு செய்யும் இயந்திரத்தில் வரிசையாக அடுக்க வேண்டும். எட்டு வரிசைகளாக நெல் நாற்று இயந்திரத்தில் வைக்கப்படும். பின்னர், நாற்று நடவு எந்திரத்தை ஓட்ட வேண்டும். ஓட்டுவதற்கு இரண்டு லிட்டர் டீசல் வேண்டும். ஒரு ஏக்கருக்கு நெல் நாற்று நடவு செய்ய இரண்டு மணி முதல் 2.30 மணி நேரமாகும். ஆட்கள் மூலம் நாற்று நடும் பட்சத்தில் ஒரு நாளைக்கு குறைந்தபட்சம் 20 பேர் தேவைப்படுவர். அவர்களுக்கு சம்பளம் வழங்க வேண்டும்.

இதுபோன்ற பிரச்னைகளில் இருந்து தீர்வு காண்பதற்காக தஞ்சாவூர் பகுதியில் விவசாயிகள் நெல் நாற்று நடவு இயந்திரத்தை வாங்க ஆரம்பித்துள்ளனர்.வி.எஸ்.டி. டில்லர்ஸ் டிராவலர்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் சார்பில் வெளிவந்துள்ள "யான் சக்தி நெல் நாற்று நடவு இயந்திரத்தின்' விலை 1.50 லட்சம் ரூபாய். ஈரோட்டில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் துறைக்கு விற்பனைக்கு வந்துள்ளது.விவசாயிகளுக்கு 70 ஆயிரம் ரூபாய் வரை மானியம் வழங்கப்படுகிறது. நவீன இயந்திரம் தேவைப்படும் விவசாயிகள் "உதவி செயற்பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை, 259, பிரப் சாலை, ஈரோடு-1 என்ற முகவரிக்கு விண்ணப்பம் அனுப்ப வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.

### சாகுபடி பயிற்சி

மதுரை:மதுரை விவசாயக் கல்லூரி வேளாண் அறிவியல் நிலையத்தின் சார்பில தெற்காறு உபவடிநீர்ப் பகுதி விவசாயிகளுக்கு கேசவன்பட்டி, வாலாந் தூர் கிராமங்களில், நெல் தரிசில் பயறு சாகுபடி பயிற்சி

அளிக்கப்பட்டது.நெற்பயிர்கள் அறுவடைக்கு பிறகு உளுந்து, பாசிப்பயறுகளை பயிரிட்டு மகசூல் பெருக்குவதற்கான ரைசோபியம் விதைநேர்த்தி, முறைகள் விளக்கப் பட் டன. உழவியல் பேராசிரியர் வெங்கட்ராமன் ஏற்பாடுகளை செய்திருந்தார்.

### விழிப்புணர்வு பெற்ற நுகர்வோர் விவசாயிகளுக்கு கலெக்டர் யோசனை

திருவாரூர்: திருவாரூர் கலெக்டர் அலுவலகத்தில் டி.ஆர்.ஓ., ஜான்லூயிஸ் தலைமையில் விவசாயிகள் மற்றும் விவசாயம் தொடர்புடைய நுகர்வோர்களுக்கான விழிப்புணர்வு பயிற்சி முகாம் நடந்தது. தமிழக அரசின் உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை தமிழகம் முழுவதும் நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் குறித்து விவசாயிகள், விவசாயம் தொடர்புடைய அலுவலர்களுக்கு பயிற்சி முகாம் நடத்தி வருகிறது. திருவாரூர், நன்னிலம், குடவாசல், கொரடாச்சேரி யூனியன்களில் தேர்வு செய்யப்பட்ட விவசாயிகளுக்கான பயிற்சியை கலெக்டர் சந்திரசேகரன் துவக்கி வைத்து பேசியதாவது: நுகர்வோர் பாதுகாப்பு நலனில் மாநில அரசு மற்ற மாநிலங்களை விட தமிழகத்தில் பல்வேறு திட்டப்பணிகளை வகுத்து செயல்படுத்தி வருகிறது. பல மாவட்டங்களில் காலிப்பணியிடமாக இருந்த நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற தலைவர் மற்றும் உறுப்பினர் பதவிகளை பூர்த்தி செய்து நுகர்வோர் மன்றம் செயல்பாடுகளை விரைவுபடுத்தி உள்ளது. தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள் மூலம் மகளிர் குழு பிரதிநிதிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.மாவட்டம் தோறும் கல்லூரி, பள்ளிகளில் நுகர்வோர் மன்றம் துவக்கி ஒவ்வொரு மன்றத்துக்கும் பத்தாயிரம் ரூபாய் நிதியுதவி செய்து மாணவர்கள் பருவ நிலையிலேயே விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது. விவசாயிகள் விதை முதல் இடுபொருட்கள் என விவசாயத்துக்கு தேவையானவற்றை பெரும்பாலும் தனியார்களிடம் வாங்குகின்றனர். இதில், தரம் குறையும்போதும், கலப்படம் ஏற்படும்போதும் பாதிப்புக்கு ஆளாகின்றனர்.

இதுபோன்ற பாதிப்புக்களிடம் இருந்து நிவாரணம் பெற நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் பயனுடையதாக உள்ளது. அந்த அடிப்படையில் விவசாயிகளுக்கு இப்பயிற்சி வழங்கப்படுகிறது.இதை விவசாயிகள் அறிந்து தங்கள் பகுதி விவசாயிகளிடம் பகிர்ந்து கொண்டு திருவாரூர் மாவட்ட மக்கள் அனைவரும் விழிப்புணர்வுடைய நுகர்வோர்களாக இருக்கவேண்டும். இவ்வாறு கலெக்டர் பேசினார்.மாவட்ட வழங்கல் அலுவலர் முகம்மது பாதுஷா வரவேற்றார். நுகர்வோர் சட்டங்கள் குறித்து பயிற்றுனர் ஜெயராமன், வேளாண் சட்டங்கள் குறித்து வேளாண் அலுவலர் உத்திராபதி ஆகியோர் பயிற்சி வழங்கினர்.கலெக்டரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) கபிலன் உட்பட பலர் பங்கேற்றனர்.

### 25ம்தேதி விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம்

பெரம்பலூர்:பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 25ம்தேதி காலை 11மணிக்கு பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடைபெறுகிறது. இதில் வேளாண் சம்பந்தமாக நீர்ப்பாசனம், கடன்உதவிகள், இடுபொருட்கள், இயந்திரங்கள் மற்றும் விவசாயிகள் மேம்பாட்டிற்கான நலத்திட்டங்கள் குறித்தும் முறையீடுகள் பற்றியும் விவாதிக்கப்படுகிறது. எனவே விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாயிகள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு தங்கள் குறைகளை தெரிவித்து பயன் பெறலாம் என மாவட்ட கலெக்டர் விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

### குலமங்கலத்தில் குறைதீர் முகாம்

திருமயம் : திருமயம் தாலுகா குலமங்கலத்தில் உணவுபொருள் வழங்குதுறை சார்பில் சிறப்பு குறைதீர்க்கும் முகாம் நடந்தது.திருமயம் வட்ட வழங்கல் அதிகாரி மணிவண்ணன் தலைமை வகித்தார். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக மண்டல மேலாளர் சந்திரசேகர் முன்னிலை வகித்தார்.

ஊராட்சி தலைவர் பழனிவேலு வரவேற்றார். பின்னர் ரேஷன்கார்டு பெயர் சேர்த்தல், நீக்கல், வயது, பிற திருத்தங்கள், உணவு பொருட்கள் தரம், விநியோகம், புதுகார்டு போன்றவை கேட்டு 69 மனுக்கள் வரப்பட்டன. அவற்றை பரிசீலித்த அதிகாரிகள் அதே இடத்தில் ரேஷன்கார்டு தொடர்பான திருத்தங்களை செய்து கொடுத்தனர். உணவு பொருட்கள் விநியோகம் பற்றி பொதுமக்களின் கருத்துக்களை அதிகாரிகள் கேட்டறிந்தனர். கிராம நிர்வாக அதிகாரி சுப்பிரமணியன் நன்றி கூறினார்.

### விவசாயிகளுக்கு பயறுவகை சாகுபடி பயிற்சி

திருவரங்குளம்:பயறுவகை சாகுபடியை ஊக்குவிக்கும் வகையில் விவசாயிகளுக்கு 500 ஏக்கர் உளுந்து விதைகளை வம்பன் வேளாண் ஆராய்ச்சி நிலையம் இலவசமாக வழங்கி உள்ளது.தற்போது பருப்பு வகைகளின் விலை உயர்ந்து வருவதால் பயறுவகை சாகுபடியின் பக்கம் விவசாயியின் கவனம் இயல்பாகவே திரும்பி உள்ளது.

எனவே இந்த நேரத்தில் விவசாயிகளுக்கு பயறுவகை சாகுபடிக்கு கை கொடுக்கும் வகையில் வம்பன் வேளாண் அறிவியல் மையம் தமிழ்நாடு நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் பயறுவகை சாகுபடி இயக்கமொன்றை தொடங்கி உள்ளது. இந்த இயக்கத்தின் ஒரு அங்கமாக விவசாயிகளுக்கு பல்வேறு பயறு வகை சாகுபடியில் தற்போது உள்ள நவீன தொழில்நுட்பங்கள் குறித்து பயிற்சியளிக்கப்பட்டது. இப்பயிற்சியை வம்பன் வேளாண் அறிவியல் நிலைய தலைவர் சின்னையன் முன்னிலையில் மதுரை வேளாண் கல்லூரி முதல்வர் வைரவன் தலைமை வகித்து தொடங்கி வைத்தார்.

பயிற்சியில் தனுக்கா அக்ரிடெக் நிறுவனத்தின் பயிர் பாதுகாப்பு நிபுணர் சுதாகர் பயறு வகைகளை பூச்சித் தாக்குதல்களில் இருந்து காப்பாற்ற கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் மற்றும் பயன்படுத்த வேண்டிய பூச்சிக்கொல்லிகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கி கூறினார். ரபி பருவத்தில் உளுந்து பயிரினை தாக்கும் மஞ்சள் தேமல் குருத்து ஈ கட்டுப்பாடு முறை குறித்து பூச்சியல் உதவி பேராசிரியர் கோபால் விளக்கி கூறினார்.

வேளாண் அறிவியல் நிலைய உதவி பேராசிரியர் குருநாதன், பண்ணை மேலாளர் அபிராமி, நீர்வள நிலவள திட்ட முதுநிலை ஆராய்ச்சியாளர்கள் பாரதிப்பிரியன், ரவிராஜன், பிரசன்னகுமார், விஜயகாந்தன், செந்தில்குமார் உட்பட பலர் பேசினர். திட்ட பொறுப்பாளர் நடராஜன் நன்றி கூறினார். பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு மொத்தம் 500 ஏக்கர் பரப்பளவில் பயிரிடத்தேவையான தரமான உளுந்து விதைகள் இலவசமாக வழங்கப்பட்டன.

### இரட்டைமடி மீன்பிடியால் மீன்வளம் பாதிப்பு : ஏமாற்றத்துடன் திரும்பிய மீனவர்கள்

ராமேஸ்வரம் : இரட்டைமடி மீன்பிடிப்பினால் மீன்வளம் குறைந்துபோன நிலையில் நேற்று மீன்பிடித்து கரை திரும்பிய மீனவர்களுக்கு மீன்பாடு குறைவாக இருந்ததால் பெருத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளது.
ராமேஸ்வரத்திலிருந்து நேற்று முன்தினம் 200க்கும் குறைவான படகுகள் மீன்பிடிக்க சென்றன. நடுக்கடலில் இலங்கை கடல் பகுதிக்குள் மீன்பிடிக்க சென்ற மீனவர்களை இலங்கை கடற்படையினர் தடுத்து விரட்டியதால், அனைத்து படகுகளும் ராமேஸ்வரம் கடல் பகுதியிலேயே மீன்பிடித்தன. ஆனால் தொடர்ந்து இரட்டைமடி மீன்பிடிப்பினால் கடல் பகுதியில் மீன்வளம் குறைந்துபோன நிலையில் நேற்று மீன்பிடித்து கரை திரும்பிய மீனவர்களுக்கு மீன்பாடு குறைவாகவே இருந்தது. போதிய மீன்கள் கிடைக்காததால் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக கரை திரும்பிய மீனவர்கள் தெரிவித்தனர்.
கடல் வளத்தை அழிக்கும் இரட்டைமடி மீன்பிடிப்பில் ராமேஸ்வரம், பாம்பன் பகுதியில் அதிகளவில் மீனவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் மீன்வளம் அழிவதோடு கடல் வளமும் பாதிக்கப்படுகிறது. தடை செய்யப்பட்ட

இவ்வகை மீன்பிடிப்பில் 10 ஆண்டுகளுக்கு முன்பு 20க்கும் குறைவான படகுகளே ஈடுபட்ட நிலையில் இன்று 200க்கும் மேற்பட்ட படகுகள் ஈடுபட்டு வருகின்றன. இதனால் கடல் வளம் அழிவதோடு ராமேஸ்வரம் கடல் பகுதியில் மீன்பிடித் தொழிலும் நலிவடைந்து வருகிறது. மேலும் மீனவர்களால் பிடித்து வரப்படும் பேசாளை மீன்களை லாரிகளில் ஏற்றிச் செல்லும்போதும், பொது இடங்களில் உலரவைப்பதாலும் சுற்றுச்சூழல், சுகாதாரப் பிரச்கனைகளும் ஏற்படுகிறது. இரட்டைமடி மீன்பிடிப்பை முற்றிலும் நிறுத்துவதற்கு அதிகாரிகள் தீவிர நடவடிக்கை எடுத்து வருவதால் கடந்த சில நாட்களாக இரட்டைமடி மீன்பிடிக்க படகுகள் செல்லவில்லை.
இதனால் ராமேஸ்வரத்தில் காற்றுடன் கலந்து வீசும் துர்நாற்றம் குறைந்துள் ளது. இந்நிலையில் நேற்று ராமேஸ்வரம் துறைமுகப்பகுதியில் மீன்துறையினால் மைக்மூலம்,இரட்டை மடி மீன்பிடிப்பில் ஈடுபடும் படகுகள் மற்றும் பேசாளை மீன்களை ஏற்றிச்செல்லும் வாகனங்கள் பறிமுதல் செய்யப்படும் என அறிவிப்பு செய்யப்பட்டது.

## 6,000 மூட்டை பருத்தி ரூ.75 லட்சத்துக்கு ஏலம்

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் 6,000 பருத்தி மூட்டை 75 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.ஆத்தூர் புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ஞாயிற்றுகிழமை பருத்தி ஏலம் நடந்து வருகிறது. தர்மபுரி, பெரம்பலூர், அரியலூர், கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை மற்றும் ஆத்தூர் அதன் சுற்றுவட்டார பகுதியில் விளைவிக்கப்படும் பருத்தியை விவசாயிகள் ஏலத்திற்கு கொண்டு வந்தனர்.

ஏலத்தில் ஆர்.சி.ஹெச்., ரக பருத்தி 5,050 மூட்டை, டி.சி.ஹெச்., 700 மூட்டை, கொட்டு பருத்தி 250 மூட்டை என 6,000 மூட்டைகள் ஏலத்துக்கு வந்தன. டி.சி.ஹெச்., ரக பருத்தி ஒரு குவிண்டால் அதிக பட்சமாக 4,991 ரூபாயும், குறைந்த பட்சமாக 4,410 ரூபாய்க்கு ஏலம் போனது. ஆர்.சி.ஹெச்., ரக பருத்தி குவிண்டால் அதிகபட்சமாக 3,716 ரூபாய், குறைந்த பட்சமாக 3,294 ரூபாய்க்கு ஏலம் போனது.

கொட்டு பருத்தி ஒரு குவிண்டால் அதிகபட்சமாக 2,540 ரூபாயும், குறைந்த பட்சமாக 1,849 ரூபாய்க்கு ஏலம் போனது.நேற்று ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் 6,000 பருத்தி மூட்டைகள் கொண்ட 2,100 குவிண்டால் பருத்தி 75 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.

## தொழில் முனைவோருக்கு அரசின் மாநில விருது

சிவகங்கை : தமிழக அரசு ஆண்டு தோறும் சிறந்த தொழில் முனைவோருக்கு மாநில, மாவட்ட அளவிலான விருதுகளை அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கி வருகிறது. இதில் மாநில அளவிலான சிறந்த தொழில் முனைவோருக்கு 50 ஆயிரம் நினைவுப்பரிசு, மாநில அளவிலான சிறந்த பெண் தொழில் முனைவோருக்கு 50 ஆயிரமும், நினைவுப்பரிசு, மாநில அளவில் சிறந்த தொழில் முனைவோருக்கு 50 ஆயிரம், நினைவுப்பரிசு, மாநில அளவிலான சிறந்த தரம் மற்றும் ஏற்றுமதிக்கான விருதுக்கு பரிந்துரைக்கப்படுவோருக்கு 50 ஆயிரமும், நினைவுப்பரிசும், மாவட்ட அளவிலான தொழில் முனைவோருக்கு நினைவு பரிசும் வழங்கப்படுகிறது.
விருதுக்கான தகுதி: 2007-2008 ஆம் ஆண்டிற்கு விண்ணப்பிக்கும் நிறுவனங்கள் 2000 ஜனவரி 1 ம் தேதிக்குப் பின்னர் உற்பத்தி தொடங்கப்பட்டு தொழில் வணிகத்துறையின் மூலம் நிரந்தர பதிவு சான்று பெற்றிருத்தல் வேண்டும். தொடர்ச்சியாக 2003 முதல் நான்கு ஆண்டுகள் செயல்பட்டிருக்கவேண்டும்.
2008-2009 ஆண்டிற்கான விருதுகளுக்கு விண்ணப்பிக்கும் நிறுவனங்கள் 2001 ஜனவரி 1 ந்தேதிக்கு பின்னர் உற்பத்தி தொடங்கி நிரந்தர வணிகத்துறை சான்று பெற்று இருக்க வேண்டும். 2004 முதல் தொடர்ச்சியாக

செயல்பட்டிருக்கவேண்டும். விருதுகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர், மாவட்ட தொழில் மையம், சிவகங்கையை அணுகலாம். விண் ணப்பங்களை பிப்.,26ம் தேதிக்குள் அனுப்பி வைக்கவேண்டும்.

### மண் ஆய்வு செய்திட ஆலோசனை

சிவகங்கை : குறைந்த செலவில் அதிக மகசூல் பெற, மண் ஆய்வு செய்வது அவசியம் என விவசாய உதவி இயக்குனர் லயோலா அன்புக்கரசி தெரிவித்தார்.
மண்ணில் தழை, மணி, சாம்பல் சத்துகளின் அளவை கணக்கிட்டு சமச்சீர் முறையில் சிக்கனமாக உரமிட்டு உர செலவை குறைக்கலாம். மண் நயம் அறிந்து அதற்கேற்ப கண்மாய் வண்டல் மணல் இட்டு பயிருக்கு ஏற்ப மண் நயத்தினை மேம்படுத்தலாம்.
பயிருக்கு தீங்கு விளைவிக்க கூடிய களர், உவர் அமிலத்தன்மையை சரி செய்திடலாம். மண் மாதிரி எடுக்கும் இடத்தில் இலை, சருகு, புல் ஆகியவற்றை மண்ணை செதுக்காமல் அப்புறப்படுத்த வேண்டும்.
பருப்பு வகைகளுக்கு அரை அடியிலும், கரும்பு, பருத்தி, வாழை, காய்கறிகளுக்கு முக்கால் அடியிலும், தென்னைக்கு மூன்று அடியிலும், பழ ரகங்களுக்கு  ஆறு அடியிலும்  "வி' வடிவில் முக்கால் அடி குழி வெட்டி, குழியின் இரு ஓரங்களிலும் மேல் இருந்து கீழ் வரை, ஏக்கருக்கு 15 இடங்களில் சேகரித்து, சமமாக பிரித்தல் முறையில் அரை கிலோ மண்ணினை  சேகரிக்க வேண்டும்.
பயிர் அறுவடைக்கு பின்பும் அடுத்த பயிருக்கு நிலத்தை தயார் செய்வதற்கு முன்பும் இடைப்பட்ட காலத்தில் எடுக்க வேண்டும். மண் மாதிரியுடன் விவசாயின் பெயர், முகவரி, நிலசர்வே எண், பாசனமுறை, நிலத்தின் வடிகால் வசதி, பயரிடப்படவுள்ள பயிர்கள் போன்ற விபரம் தெரிவிக்க வேண்டும்.

கட்டண விபரம்: மண் மாதிரிக்கு 10 ரூபாய், பாசன நீர் ஆய்வுக்கு 10 ரூபாய் வசூலிக்கப்படும். பாசன நீர் சோதனைக்கு ஒரு லிட்டர் தண்ணீர் எடுத்து, விவசாய உதவி இயக்குனரை அணுகி மண்பரிசோதனை செய்யலாம், என்றார்.

### நீர் வள மேம்பாட்டில் கவனம் செலுத்தவில்லை எனில் ஆபத்து : துணைவேந்தர் ராமசாமி பேச்சு

தேவகோட்டை : தேவகோட்டை சேவுகன் அண்ணாமலை கல்லூரியில் பட்டமளிப்பு விழா நடந்தது. கல்லூரி தலைவர் லட்சுமணன் தலைமை வகிக்க, துணை தலைவர் சேவுகன் முன் னிலை வகித்தார். முதல் வர் அருணாசலம் வரவேற் றார். காந்திகிராம் பல்கலை துணைவேந்தர் ராமசாமி பேசியதாவது: பட்டம் பெறும் இளைஞர்களுக்கு பல துறைகளிலும் வேலைவாய்ப்பு உள்ளது. வேலைக்காக வெளிநாடு செல்ல தேவையில்லை. பன்னாட்டு நிறுவனங்கள், இந்தியாவிற்கு வரத்துவங்கிவிட்டது. விவசாயம், நீர்வளமேம்பாடு, நானோ தொழில்நுட்ப துறைகளில் வளர்ந்துள் ளது. சரியான மேற்படிப்பை தேர்வு செய்து, மனித வளத்தை பெருக்கி நாட்டுக்கு சேவை செய்யவேண்டும். பல துறைகளுக்கான, மேற்படிப்புகள் காந்திகிராம பல்கலையில் கற்றுத்தருகிறோம்.
உலகப்போர்: நீர்வள மேம்பாட்டில் கவனம் செலுத்தாவிட்டால், தண் ணீருக்காக மூன்றாம் உலகப்போர் வந்தாலும் ஆச்சரியப்படுவதிற் கில்லை. வைகை ஆற்றின் நீரோட்டம் காரைக் குடி, தேவகோட்டையிலும் உள்ளது. எந்த அறிவியல் வளர்ச்சி இல்லாத காலத்தில், குளம், கண் மாய்களை எப்படி அமைத் தனர் என, ஆராய்ச்சியாளர்களுக்கு இன்னும் புலப்படவில்லை. நீர்வள மேம்பாட்டுக்கான படிப்பு அவசியம், என்றார்.

### விரைவில் மின்னணு எடை தராசுகள் பொருத்தப்படும் : வேளாண் விற்பனை வாரிய தலைவர் தகவல்

தஞ்சாவூர்:அனைத்து உழவர் சந்தைகளிலும் விரைவில் மின்னணு எடை தராசுகள் பொருத்தப்படும் என்று வேளாண் விற்பனை வாரிய மாநிலத் தலைவர் கணேசன் கூறினார்.தஞ்சை நாஞ்சிக்கோட்டை சாலையில் இயங்கி வரும் உழவர்

சந்தையின் செயல்பாடுகளை வேளாண் விற்பனை வாரிய மாநிலத் தலைவர் கணேசன் நேற்று (21ம் தேதி) ஆய்வு செய்தார்.அப்போது உழவர் சந்தையில் இருந்த விவசாயிகள், நுகர்வோர் ஆகியோரிடம் உழவர் சந்தை செயல்பாடுகள் குறித்தும், விவசாயிகளிடம் கிராமப் பகுதியில் இருந்து உழவர் சந்தைக்கு சரியான நேரத்தில் பஸ்கள் வருகிறதா? என்றும் கேட்டார்.

பின்னர் அவர் கூறியதாவது:வியாபாரிகளின் பிடியில் விவசாயிகள் சிக்கி தவிக்காமல் இருக்கவும், உற்பத்தி செய்த பொருட்களை விவசாயிகளே நேரடியாக விற்பனை செய்யவும் கடந்த 99ம் ஆண்டு முதல்வர் கருணாநிதியால் உழவர் சந்தை ஏற்படுத்தப்பட்டது.இவ்வாறு திறக்கப்பட்ட அனைத்து உழவர் சந்தைகளும் நல்ல முறையில் இயங்கி வருகிறது. தமிழகத்தில் உள்ள அனைத்து உழவர் சந்தைகளிலும், விவசாயிகள் விற்பனை செய்யும் இடங்களில் டைல்ஸ் கற்களும், நடைபாதைகயில் செராமிக் கற்களும் பதிக்கப்பட உள்ளது. உழவர் சந்தையால் விவசாயிகளுக்கு லாபம் கிடைக்கிறது. அதேபோல் நுகர்வோருக்கும் குறைந்த செலவில் பசுமையான காய்கறிகள் கிடைக்கிறது. தமிழகம் தோறும் இன்னும் சில மாதங்களில் 25 புதிய உழவர் சந்தைகள் திறக்கப்பட உள்ளது. இதில் தஞ்சை மாவட்டத்தில் 2 இடங்களில் புதிய உழவர் சந்தைகள் அமைக்க இடங்கள் தேர்வு செய்யப்பட்டு வருகிறது. அனைத்து உழவர் சந்தைகளிலும் விரைவில் மின்னணு எடை தராசுகள் பொருத்தப்பட உள்ளது. இதற்கு தேவையான அனைத்து நடவடிக்கையிலும் அரசு இறங்கிஉள்ளது. இவ்வாறு அவர் கூறினார். வேளாண் விற்பனைக்குழு தஞ்சை மாவட்டத் தலைவர் செல்வம், செயலாளர் மனோகரன், வேளாண் துணை இயக்குனர் பாலசுப்பிரமணியன், உழவர் சந்தை நிர்வாக அலுவலர் சாருமதி ஆகியோர் உடனிருந்தனர்.

### தஞ்சையில் மேலும் 2 உழவர் சந்தை விற்பனை வாரியத்தலைவர் தகவல்

தஞ்சாவூர்: தஞ்சாவூர் நாஞ்சிக்கோட்டையில் உள்ள உழவர் சந்தையை வேளாண் விற்பனை வாரியத்தலைவர் கணேசன் நேரில் ஆய்வு செய்தார். அங்குள்ள விவசாயிகளின் கடைகளுக்கு சென்று, ""இங்கு வசதிக்குறைபாடுகள் உள்ளதா? விற்பனை எவ்வாறு உள்ளது. லாபம் உள்ளதா?,'' என கேட்டார். ""போக்குவரத்து வசதி இருப்பதால் பிரச்னைகள் ஏதுமில்லை. மக்கள் அதிகம் வந்து காய்கறிகள் வாங்கிச் செல்கின்றனர். நாங்கள் கூடுதல் விலைக்கு விற்காமல் குறைந்த லாபத்தில் விற்பனை செய்கிறோம். இருந்தும் லாபம் உள்ளது,'' என விவசாயிகள் கூறினர்.

நுகர்வோர்களிடம் அவர் குறைகள் கேட்டார். ""விவசாயிகளே இங்கு நேரடியாக விற்பனை செய்வதால் காய்கறிகள் தரமாக உள்ளது. விலையும் குறைவாக உள்ளது,'' என்றனர்.பின், வாரியத்தலைவர் கணேசன் கூறுகையில், ""தஞ்சையில் உழவர் சந்தை சிறப்பாக செயல்படுகிறது. 1999ல் தமிழக முதல்வரால் இச்சந்தை துவக்கப்பட்டது. இங்குள்ள கடைகளில் டை ல்ஸ் பதிக்கும் பணி நடக்க உள்ளது. நடைபாதையில் செராமிக் டைல்ஸ் பதிக்க திட்டமிடப்ப ட்டுள்ளது. அனைத்து கடைகளு க்கும் எலக்ட்ரானிக் தராசு வழங்கப்படும். தமிழகத்தில் விரைவில் 20 உழவர் சந்தை அ மைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதில், தஞ்சை மாவட்டத்தில் இரண்டு இடங்களில் உழவர் சந்தை அமைக்க இடம் தேர்வு செய்யும் பணி நடக்கிறது,'' என்றார். மாவட்ட வேளாண் விற்பனைக்குழு தலைவர் செல்வம் உட்பட பலர் உடனிருந்தனர்.

### பயறு வகை பயிர்களுக்கு அரசு மான்யம் அறிவிப்பு

பெரியகுளம் : கோடைப்பருவத்தில் பயறு வகைகளை பயிர் செய்வதற்கு விவசாயிகளுக்கு மானியம் வழங்கப் பட உள்ளது.

இதுகுறித்து வடுகபட்டி வேளாண்மை உதவி இயக்குனர் பெரியசாமி கூறுகையில்,""வேளாண்மை மையத்தில் உளுந்து ஏ.பி.கே.1 ரகம், (ஆதாரவிதை) ஆயிரத்து 500 கிலோவும், தட்டைபயறு கோ(சிபி) 7 (சான்றுவிதை) இரண்டாயிரத்து 600 கிலோவும் இருப்பில் உள்ளது. இந்த ரகங்கள் 65 முதல் 70 நாட்கள் வயதுடையது.
விதை கிராம திட்டத் தில் நடப்பு ஆண்டில் பயறு விதைகள் 50 சதவீதம் மானிய விலையில் வினியோகம் செய்யப்படவுள் ளது. பயறுவகை பெருக்கு திட்டத்தில், ஒரு கிலோ விதைக்கு 20 ரூபாய், பூக்கும் பருவத்தில் 2 சதம் டிஏபி கரைசல் தெளிப்பதற்கு ஒரு எக்டருக்கு 25 கிலோ டி.ஏ.பி.உரம் மற்றும் ஒரு விவசாயிக்கு 197 ரூபாயம் மானியம் வழங்கப்பட உள்ளது," என்றார்.

### தமிழகம், கேரளாவில் முட்டை விலை 246 காசாக நிர்ணயம்

நாமக்கல்: தமிழகம், கேரளாவில் முட்டை விலை 246 காசாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நாமக்கல்லில் தேசிய முட்டை விலை நிர்ணயக்குழு கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, ஏற்றுமதி குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து 245 காசுக்கு விற்பனை செய்து வந்த முட்டை 1 காசு உயர்த்தி 246 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டை விலை தொடர் ஏற்றம் கோழிபண்ணையாளர் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை விவரம்: ஹைதராபாத் 226 காசு, விஜயவாடா, தனுகு 228 காசு, நெல்லூர், சித்தூர் 243 காசு, சென்னை 250 காசு, மைசூர் 242 காசு, பெங்களூரு 237 காசு, மும்பை 249 காசு, டில்லி 237 காசு, கோல்கத்தா 260 காசு. நாமக்கல்லில் நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முட்டைக்கோழி விலை 29 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் 66 ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டது.

### மாவுப்பூச்சி கட்டுப்படுத்த இலவச மருந்து தெளிப்பு : வேளாண் உதவி இயக்குனர் தகவல்

ராசிபுரம்: "பப்பாளி மாவுப்பூச்சிகளின் தாக்குதலை கட்டுப்படுத்த முதல்கட்டமாக அசாடிராக்டின் மருந்தை இலவசமாக தெளிப்பு செய்யலாம் என தமிழக அரசு அறிவித்துள்ளது' என, எலச்சிபாளையத்தில் நடந்த முகாமில் வேளாண் உதவி இயக்குனர் பேசினார். எலச்சிபாளையம் வட்டாரத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் ஒட்டுமொத்த மாவுப்பூச்சி மருந்து தெளிப்பு கொன்னையார் கிராமத்தில் நடந்தது. யூனியன் சேர்மன் ராசு தலைமை வகித்து முகாமை துவக்கி வைத்தார். வேளாண் உதவி இயக்குனர் லோகநாதபிரகாசம் பேசியதாவது: பப்பாளி மாவுப்பூச்சி தாக்குதல் முதலில் சில பகுதிகளில் பப்பாளி பயிரில் மட்டும் காணப்பட்டது. பின்னர் இப்பூச்சி மரவள்ளி, காட்டாமணக்கு, செம்பருத்தி, கொய்யா, தேக்கு, வெண்டை, கத்தரி, தக்காளி, பருத்தி போன்ற பயிறுகளிலும் பார்த்தீனியம் போன்ற களைச் செடிகளிலும் பரவி தற்போது மல்பெரி செடிகளையும் தாக்க துவங்கியுள்ளது.

பாதிக்கப்பட்ட பயிரில் இலை உருமாறி சிறுத்து காணப்படும். மாவுப்பூச்சிகள் தண்டுகள், இலைகளின் அடிப்பாகம் மற்றும் இலைகாம்பு இடுக்குகளில் காணப்படும். மெழுகு போன்ற மெல்லிய வெள்ளை நிற உறை சூழ்ந்து காணப்படும். மாவுப்பூச்சிகள் வெளியேற்றும் தேனை உண்ண எறும்புகள் ஊர்ந்து செல்வதை பயிர்களில் காணமுடியும். இலையின் மேற்பரப்பில் கரும்பு பூஞ்சானம் படர்ந்து காணப்படும். மாவுப்பூச்சியைக் கட்டுப்படுத்த முதலில் வயல்களை களையின்றி வைத்துக் கொள்ளவேண்டும். பாதிப்பு மிகக்குறைவாக இருந்தால் பாதிக்கப்பட்ட இலை தண்டுகளை பாலிதீன் பைகளில் சேகரித்து எரிக்கவும். பாதிப்பு அதிகமாக இருந்தால் ஒட்டு மொத்தமாக அடிவெட்டு செய்து செடிகளை தீயிட்டு அழிக்க வேண்டும்.

முதலில் ஒரு சதவிகிதம் அசாடிராக்டின் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் 2 மில்லி வீதம் ஒரு ஏக்கருக்கு 200 லிட்டர் மருந்துகரைச்சல் தயார் செய்து கைத்தெளிப்பான் மூலமாக செடியின் அடிக்கட்டை தண்டு மற்றும் செடியை சுற்றியுள்ள

மண் நன்கு நனையும்படி தெளிக்க வேண்டும். முதல் தெளிப்பிலிருந்து 15 நாள் கழித்து ப்ரோ ஃபனோபஸ் 50 சதவிகிதம் மருந்தை இரண்டு மில்லி ஒரு லிட்டர் தண்ணீர் என்ற அளவில் கலந்து, ஒட்டு திரவம் கலந்து தெளிக்க வேண்டும். விவசாயிகள் அனைவரும் ஒட்டுமொத்தமாக மேற்கண்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு பப்பாளி மாவுப்பூச்சிகளின் தாக்குதலை கட்டுப் படுத்தமுடியும். இவற்றை கட்டுப்படுத்தும் வகையில் முதல்கட்டமாக அசாடிராக்டின் ஒரு சதவீதம் மருந்தை இலவசமாக தெளிப்பு செய்ய தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. ஒட்டு மொத்த மருந்து தெளிப்பு முகாமில் மரவள்ளி பயிரில் மாவுப்பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த கைத்தெளிப்பான் பயன்படுத்தப்பட்டு வந்தது. இவ்வாறு அவர் பேசினார்.
வேளாண் அலுவலர் இராஜகோபால், துணை வேளாண் அலுவலர் சங்கரன், உதவி வேளாண் அலுவலர்கள், சுப்ரமணியம், குழந்தைவேல், செந்தில்குமார் உட்பட பலர் பங்கேற்றனர்.

### சிறு விவசாயிகள் கூட்டம்

கோத்தகிரி : நீலகிரி மாவட்ட மலர் சாகுபடி சிறு விவசாயிகள் கூட்டம், கோத்தகிரி என்.சி.எம்.எஸ்., மண்டபத்தில் நடத்தப்பட்டது.மலர் சாகுபடியில் உள்ள இன்னல்கள், கூடுதல் செலவு, தரமற்ற நாற்றுகளால் மகசூல் பாதிக்கப்படுதல், மலர்களை சந்தைப்படுத்துவதில் விவசாயிகள் ஏமாற்றமடைதல், போதிய விலை கிடைக்காமல் நஷ்டம், இயற்கை சீற்றத்தால் பசுமைக் குடில்கள் சேதமடைதல், மலர் சாகுபடிக்கான வங்கிக் கடனை செலுத்த முடியாதது குறித்து விவாதிக்கப்பட்டது. மத்திய, மாநில அரசுகளின் விவசாயக் கடன் தள்ளுபடி திட்டத்தில், மலர் சாகுபடி சிறு விவசாயிகளையும் சேர்க்க வேண்டும்; தற்போதுள்ள கடனை வங்கிகளுக்கு செலுத்த முடியாத நிலையில் உள்ளதால், மலர் சாகுபடி விவசாயிகள் மீது, வங்கி நிர்வாகங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என வங்கி அதிகாரிகளை கேட்டுக்கொள்வது என்பன உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. சங்கத் தலைவர் விஸ்வநாதன் தலைமை வகித்தார். மோத்திஸ், கிருஷ்ணமூர்த்தி முன்னிலை வகித்தனர். சந்திரசேகர் நன்றி கூறினார்

### நெல் ஆராய்ச்சி நிலையத்தில் தொழில் நுட்ப வார விழா

திருவள்ளூர் :திருவள்ளூர் அடுத்த திரூர் நெல் ஆராய்ச்சி நிலையம் மற்றும் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் தொழில் நுட்ப வார விழா இன்று முதல் வரும் 26ம் தேதி வரை நடைபெறுகிறது.இதில், புதிய பயிர் ரகங்கள், பண்ணை இயந்திரக் கருவிகள், உரங்கள், பூச்சி மருந்துகள் மற்றும் பல்வேறு வேளாண் தொழில் நுட்பங்கள் பற்றிய கண்காட்சியும், செயல் விளக்கங்களும் இடம் பெறுகின்றன.விழாவில், மண்டல ஒருங்கிணைப்பாளர், தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழக விரிவாக்கக் கல்வி இயக்குனர், தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் ஆகியோர் பங்கேற்கின்றனர்.மேலும் வேளாண்மை, தோட்டக் கலை, வேளாண் பொறியியல், கால்நடைத் துறை, மீன் வளர்ப்புத் துறை அதிகாரிகளும் கலந்துகொள் கின்றனர்.எனவே, இதில், விவசாயிகள் கலந்து கொண்டு பயனடையுமாறு திரூர் நெல் ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் ராமசுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்

### கரும்பு விளைச்சல் குறைவால்... கூட்டுறவு சர்க்கரை ஆலை முடல்? : ரேணுகாம்பாள் கோவில் கும்பாபிஷேகம்

பள்ளிப்பட்டு :ரேணுகாம்பாள் கோவில் குடமுழுக்கு நன்னீராட்டு பெருவிழா நடந்தது.பள்ளிப்பட்டு அடுத்த அத்திமாஞ்சேரிபேட்டை கிராமத்தில் கிராம தேவதை அருள்மிகு எல்லையம்மன் ரேணுகாம்பாள் திருக்கோவில் உள்ளது. சிதிலமடைந்து இருந்த இக்கோவில் சமீபத்தில் கிராம பொது மக்களால் எட்டு லட்சம் ரூபாய் மதிப்பில் புதுப்பிக்கப்பட்டது.

புதிய விமானம், கருவறை, அம்மன் சிலை மற்றும் சிம்மம், பலிபீடம் ஆகியவை புதுப்பிக்கப் பட்டு பொலிவுடன் கோவில் உள்ளது.இக்கோவிலின் சிறப்பு நன்னீராட்டு குடமுழுக்கு பெருவிழா கடந்த 19ம் தேதி காலை 8 மணி முதல் 9.30 மணிக்கு நடந்தது.விழா காஞ்சி ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடம் ஜெகத்குரு ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள், விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அருளாசியுடன் நடந்தது. இரவு 7 மணியளவில் மங்கள வாத்தியங்கள் முழங்க வாண வேடிக்கையுடன் அம்மன் திருவீதியுலா நடந்தது.அம்மன் சிலை கிராமத்தின் முக்கிய வீதிகள் வழியாக ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு கோவிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டது.இதற்கான விழா ஏற்பாடுகளை ஊராட்சித் தலைவர் கோதண்டராமன், ஒன்றியக் கவுன்சிலர் ஊரப்பன், அண்ணாமலை, கோவில் திருப்பணிக் குழுத் தலைவர், உறுப்பினர்கள் மற்றும் கிராம மக்கள் செய்தனர்.

### கரும்புக்கு கூடுதல் விலை அறிவிக்காததால் கூட்டுறவு சர்க்கரை ஆலை மூடும் அபாயம்

பேரம்பாக்கம் :கரும்புக்கு கூடுதல் விலை அறிவிக்காததால், பல விவசாயிகள் மாற்றுப் பயிருக்கு மாறிவிட்டனர். இதனால், கரும்பு விளைச்சல் குறைந்து திருவாலங்காடு கூட்டுறவு சர்க்கரை ஆலை மூடும் அபாயம் ஏற் பட்டுள்ளது.திருவள்ளூர் மாவட்டம் திருவாலங்காட்டில் உள்ளது திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை.இந்த ஆலைக்கு உட்பட்டு திருவள்ளூர், பேரம்பாக்கம், கடம்பத்தூர், அரக்கோணம், திருத்தணி, நெமிலி, பனப்பாக் கம், சாலை, ஆர்.கே.பேட்டை, அத்திமாஞ்சேரிபேட்டை ஆகிய பகுதிகளில் கரும்பு அலுவலகங்கள் உள்ளன.கரும்புக்கு கட்டுபடியான விலையை மத்திய, மாநில அரசுகள் அறிவிக்க வேண்டும் என தமிழக அரசுக்கும், சர்க்கரை துறைக்கும் இப்பகுதி விவசாயிகள் பலமுறை கோரிக்கை மனுக் கள் அனுப்பியும், போராட் டங்கள் நடத்தியும் உள்ளனர்.

இந்நிலையில், 12 மாதங்கள் வயலில் போராடி விவசாயம் செய்யும் கரும்பு விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு 1,437 ரூபாய் என அரசு அறிவித்துள்ளது.இதில், கரும்பு வெட்டுக் கூலி, தரமான உரங்கள், பயிரிடும் செலவு என செலவுகள் போக விவசாயிக்கு 200 ரூபாய்க்கு மேல் நஷ்டம் ஏற்படுகிறது.ஆனால், மூன்று மாதத்தில் பயிரிடும் நெல் விவசாயிகளுக்கு மத்திய அரசின் குறைந்தபட்ச ஆதரவு விலை மற்றும் ஊக்கத் தொகையுடன் நெல் குவின்டாலுக்கு 1,000 ரூபாய் என அரசு உயர்த்தியுள்ளது.தற்போது, தனியார் கம்பெனிகள் பெருகி விட்ட நிலையில் விவசாய கூலி வேலைக்கு ஆட்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.நெல் பயிரிடும் விவசாயிகள் அறுவடைக்கு இயந்திரத்தை பயன்படுத்துவதால் இப் பிரச்னை இல்லை.ஏற்கனவே கரும்பு டன் ஒன்றுக்கு ரூபாய் 2,000 வழங்க வேண்டும் என கரும்பு விவசாயிகள் கோரினர். ஆனால், எந்த பயனும் ஏற்படவில்லை.இதனால், வேறு வழியின்றி விவசாயிகள் பலர் மாற்றுப் பயிரான நெல்லுக்கு மாறிவிட்டதால், திருவாலங்காடு சர்க்கரை ஆலைக்கு உட்பட்ட பகுதிகளில் கரும்பு விளைச்சல் குறைந்தது. இதனால், அக்டோபரில் துவங்கி மார்ச் மாதம் முடிய வேண்டிய அரவைப் பருவம் டிசம்பர் மாதத்திலேயே முடிந் தது.இதே நிலை நீடித்தால், மேலும் கரும்பு விளைச்சல் குறைந்து திருவாலங்காடு கூட்டுறவு சர்க்கரை ஆலை மூடும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

### கால்நடை சிகிச்சை முகாம்

திருவணணாமலை : தி.மலை அருகே சோமாசிபாடியில் ராஜலட்சுமி பாலிடெக்னிக் கல்லூரி சார்பில் என்.எஸ்.எஸ். சிறப்பு முகா ம் நடந்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக கால்நடை சிகிச்சை முகாம் நடந்தது. முகாமை கால்நடை துறை மண்டல இணை இயக்குனர் செல்வமாணிக்கம் தொடங்கி வைத்தார். பாலிடெக்னிக் நிர்வாக அலுவலர் சுரேஷ் முன்னிலை வகித் தார்.கால்நடை மருத்துவர் பிரேம்குமார் தலைமையிலான குழுவினர் 500 கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தனர். ஏற்பாடுகளை திட்ட அலுவலர் சிங்கராயன் செய் துள்ளார்.

### தமிழக விவசாயிகள் சங்கம்: மாவட்ட செயற்குழு கூட்டம்

திருநெல்வேலி:வடக்கு காவலாகுறிச்சியில் தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட செயற்குழு கூட்டம் நடந்தது.கூட்டத்திற்கு மாவட்ட செயலாளர் மாடசாமி தலைமை வகித்தார். துணைத் தலைவர் துரைப்பாண்டியன், துணை செயலாளர் கிருஷ்ணன், ஊத்துமலை செயலாளர் முத்துபாண்டியன் முன்னிலை வகித்தனர். வடக்கு காவலாகுறிச்சி செயலாளர் கண்ணன் வரவேற்றார்.கூட்டத்தில், பல ஆண்டு காலமாக நிலுவையில் உள்ள இரட்டை குளம் கால்வாய் திட்டத்தை அரசு உடனடியாக நிறைவேற்றி தர வேண்டும். ஆற்று மணல், குண்டுக்கல் தவிர விவசாயிகளுக்கு தேவையான குளத்து கரம்பை மண், செம்மண், ஓடை மண் ஆகியவற்றை கொண்டு செல்ல தடை நீக்கி அரசு அனுமதி வழங்க வேண்டும். சிறு, குறு விவசாயிகளுக்கு ஆழ்குழாய் கிணறு அமைத்து தந்து இலவச மின்சாரம் வழங்க வேண்டும் என்பன போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.நவநீதகிருஷ்ணபுரம் மாவட்ட பொருளாளர் கதிரவன் நன்றி கூறினார்.

### அறுவடை பின் செய் நேர்த்தி தொழில் நுட்ப பயிற்சி

தூத்துக்குடி: நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ் கோரம்பள்ளம் ஆறு உபவடிநிலப்பகுதி விவசாயிகளுக்கான அறுவடை பின் செய் நேர்த்தி தொழில் நுட்ப பயிற்சி வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில் தூத்துக்குடியில் நடந்தது.வேளாண்மை அலுவலர், வேளாண் வணிகம் ராஜா வரவேற்றார். கூட்டத்திற்கு கருத்தையா தலைமை வகித்தார்.

வேளாண்மை இணை இயக்குநர் லூயிஸ் ராஜரத்தினம் பேசும் பொழுது செம்மை நெல்லை சாகுபடி மற்றும் நவீன விவசாய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி எவ்வாறு பயிர் விளைச்சலை அதிகரிப்பது என்பது குறித்து விளக்கினார். வேளாண்மை துணை இயக்குநர் முருகானந்தம் பேசும்பொழுது விளை பொருள் உற்பத்தியாளர் குழுக்கள் அமைத்து விவசாயிகள் விளை பொருட்களை ஒருங்கிணைத்து சந்தைப்படுத்துவதன் அவசியம் குறித்தும், கொள்முதலீட்டாளர்களுடன் விளைபொருள் உற்பத்தியாளர் குழுக்கள் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து அதன் மூலம் விளைபொருட்களுக்கு அதிக லாபம் பெறுவது குறித்தும் பேசினார்.

கலெக்டரின் நேர்முக உதவியாளர் தனசிங் டேவிட் நீர்வள நிலவள திட்டம் தூத்துக்குடி மாவட்டத்தில் எவ்வாறு செயல்படுத்தப்படுகிறது என்பது குறித்து பேசினார். கோரம்பள்ளம் ஆறு உபவடி நிலம் உதவி செயற்பொறியாளர் முருகன், நீர்வள நிலவளத்திட்டத்தின் கீழ் செப்பனிடப்படவிருக்கும் குளங்கள் குறித்து பேசினார். அறுவடைக்குப்பின் செய் நேர்த்தி தொழில் நுட்பங்கள் குறித்து ஸ்காட் வேளாண் அறிவியல் மைய தொழில் நுட்ப வல்லுநர்களான மோகன் மற்றும் அசோக்குமார் ஆகியோர் பேசினர். வாழை விவசாயிகள் மதிப்பு கூட்டுதல் தொழில் நுட்பம் மூலம் சிப்ஸ், வாழைநார் முதலியன தயார் செய்து அதிக லாபம் பெறலாம் என தோட்டக்கலை அலுவலர் முருகன் தெரிவித்தார். கூட்டத்தின் முடிவில் உதவி வேளாண்மை அலுவலர் சுரேஷ் நன்றி தெரிவித்தார்.

### வேளாண்மை துறை பொறியியல் பிரிவு எங்கே? உடுமலை பகுதி விவசாயிகள் தேடல்

உடுமலை:விவசாயிகளுக்கு தேவையான தொழில் நுட்பங்களை வழங்க கூடிய வேளாண்மை துறையின் பொறியியல் பிரிவு உடுமலையில் பகுதியில் எங்கே செயல்படுகிறது எனத் தெரியாமல் இத்துறையைச் சேர்ந்த அதிகாரிகள் உடுமலை, மடத்துக்குளம் தாலுகா பகுதி விவசாயிகள் தீவிரமாக தேடி வருகின்றனர்.தமிழக அரசின் சார்பில் விவசாயிகளுக்கு தேவையான கருவிகள் மற்றும் நவீன தொழில்நுட்பங்களை வழங்க வேளாண்துறை அமைக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு சொட்டு நீர் பாசன மானியம், பழைய பம்ப் செட்களை மாற்ற 10 ஆயிரம் ரூபாய் மானியம், பயன்படுத்திய சொட்டு நீர் பாசன கருவிகளை மாற்றுவதற்கு மானியம், மருந்து தெளிப்பு கருவிகள், உழவுக்கு டிராக்டர், பார் அமைக்கும் கருவி உட்பட நவீன வேளாண் கருவிகள் மானிய விலைகள் வழங்கப்படுகிறது.பாசன கால்வாய் அமைப்பு, பண்ணை குட்டைகள், கிணறு, மழை நீர் சேகரிப்பு தொட்டி, தடுப்பணைகள் என பல்வேறு நலத்திட்ட உதவிகளும், தார்பாய், டிராக்டர்கள், வேளாண் கருவிகள் குறைந்த வாடகையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.ஆனால், உடுமலை, மடத்துக்குளம், தாலுகாவில் விவசாயம் பிரதானமாக உள்ள நிலையில், இத்துறைக்கு என தனி அலுவலகம் உடுமலையில் இல்லை. ஆனால், மூன்று பகுதியில் பொறியாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளதாக திருப்பூர் மாவட்ட நிர்வாகத்தின் அறிவிப்பில் உள்ளது. இதைகேட்டு விவசாயிகள், வேளாண்மை அதிகாரிகளை ஒரு ஆண்டாக தேடி வருகின்றனர்.

விவசாயத்திற்கு ஒதுக்கப்படும் நிதி மற்றும் நலத்திட்ட உதவிகள் குறித்து விவசாயிகளிடையே போதிய விழிப்புணர்வு இல்லாத நிலையில், முக்கியமான ஒரு துறையே மாயமானதால் உடுமலை விவசாயிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.இத்துறையில் சமீபத்தில் ஒன்பது லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கியும், ஒரு விவசாயிக்கு கூட இத்தொகை கிடைக்கவில்லை; மாவட்ட நிர்வாகம் மற்றும் வேளாண் துறை அமைச்சரிடம் உடுமலை பகுதி விவசாயிகள் நேரடியாக புகார் செய்ததையடுத்து, கூடுதல் நிதியாக ஒதுக்கிய 14 லட்சம் ரூபாயும் இதுவரை விவசாயிகளுக்கு வழங்கப்படவில்லை.புதிய திருப்பூர் மாவட்டம் துவங்கி ஒரு ஆண்டில், உடுமலையிலுள்ள மூன்று வட்டாரத்திலுள்ள ஒரு விவசாயி கூட பலனடையவில்லை என விவசாயிகள் வேதனை தெரிவித்துள்ளனர்.உடுமலையிலுள்ள மூன்று வட்டாரத்திற்கு நியமிக்கப்பட்ட அதிகாரிகள் வாரத்தில் வியாழக்கிழமைகளில் அந்தந்த வேளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தில் சிறப்பு முகாம் அமைத்து, விவசாயிகளுக்கு உதவிகள் வழங்குவார்கள் என இத்துறை செயற்பொறியாளர் தெரிவித்த நிலையில், ஒரு நாள் கூட மூன்று வட்டார வேளாண் அலுவலகத்திற்கும் அதிகாரிகள் வரவில்லை.விவசாயிகள் கூறியதாவது:

உடுமலை, மடத்துக்குளம் பகுதியில் வேளாண் பொறியியல் துறை செயல்பாடு முழுமையாக இல்லை. திருப்பூர் மாவட்ட நிர்வாகம், வேளாண் துறை அமைச்சரிடம் தெரிவித்தும், இது வரை அதிகாரிகள் கண்டு கொள்ளவில்லை. தாராபுரம் அலுவலகத்திற்கு சென்றாலும் அங்கும் அதிகாரிகள் இருப்பதில்லை. இதே நிலை தொடர்ந்தால், வேளாண் பொறியியல் துறை அதிகாரிகளை காணவில்லை என போலீசில்தான் புகார் தெரிவிக்க வேண்டும் என்றனர்.வேளாண் பொறியியல் துறை அதிகாரிகள் வருவதாக கூறிய வியாழக்கிழமை அன்று, உடுமலை, மடத்துக்குளம், பெதப்பம் பட்டி வட்டார வேளாண் உதவி இயக்குனர் அலுவலகங்களில் தொடர்பு கொண்டு கேட்ட போது, அவர்கள் வருவதில்லை என மட்டும் பதில்தான் கிடைத்தது.

### விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்

விருதுநகர் : விருதுநகர் கலெக்டர் அலுவலக கூட்டமன்ற அறையில் வரும் 26ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் சிஜிதாமஸ் தலைமையில் நடைபெறுகிறது. கூட்டத்தில் விவசாயிகள் கலந்து கொண்டு விவசாயம் சம்பந்தப்பட்ட பொதுவான கோரிக்கைகளை கலெக்டரிடம் நேரடியாக மனு மூலம் தெரிவிக்கலாம்.

### பாமாயில் சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி

கள்ளக்குறிச்சி : கள்ளக்குறிச்சி வேளா ண்மைத் துறை மூலம் பாமாயில் சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

கள்ளக்குறிச்சி அடுத்த ஏமப்பேரில் உள்ள வேளாண் துறை அலுவலகத்தில் நடந்த பயிற்சி முகாமிற்கு ஒன்றிய சேர்மன் வக் கீல் வெங்கடாசலம் தலைமை தாங்கினார். மாவட்ட வேளாண் துணை இயக்குனர் கண் ணன் முன்னிலை வகித்தார்.

வேளாண்மை உதவி இயக்குனர் சங்கர் வரவேற் றார். எண்ணெய் பனை (பாமாயில் மரம்) சாகுபடி, தொழில் நுட்பம் குறித்து விவசாயிகளுக்கு விளக்கப் பட்டது. விதைப்பு முறை, நாற் றங்கால், நடவு முறை, நீர்ப் பாசனம், உரமேலாண்மை, பயிர் பாதுகாப்பு, அறுவடை மகசூல் மற்றும் உயர் வருமானம் குறித்து முன்னாள் திருச்சி வானொலி நிலைய வேளாண் இயக்குனர் துகிலி சுப்ரமணியன் விளக்கி கூறினார்.

திருச்சி காவேரி பாமாயில் நிறுவன மாவட்ட ஒருங்கிணைப்பாளர் நாகப் பன், உதவியாளர் வெங்கடேசன் ஆலை நடவடிக் கைகள் குறித்து பேசினர். பயிற்சிக்கான ஏற்பாடுகளை வேளாண்மை அலுவலர் ஆனந்தன், விரிவாக்க உதவியாளர் கோபால், உதவி வேளாண்மை அலுவலர்கள் தவமணி, ஜெயக் குமார், ரமேஷ்குமார், ராஜா செய்திருந்தனர்.

---

## ***பள்ளிப்பாளையத்தில் நாளை நூல் விலையை குறைக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் ஜெயலலிதா அறிவிப்பு***

*சென்னை, பிப்.22–*

*விசைத்தறிக்கான நூல் விலையை குறைக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி பள்ளிப்பாளையத்தில் நாளை ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று ஜெயலலிதா அறிவித்துள்ளார்.*

*அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதா விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–*

*நூல் விலை உயர்வு*

*நாமக்கல் மாவட்டத்தில், பள்ளிப்பாளையம், குமாரபாளையம், வெண்ணந்தூர், அத்தனூர், ராசிபுரம், குருசாமிபாளையம், திருச்செங்கோடு, மல்லசமுத்திரம், சீராப்பள்ளி ஆகிய பகுதிகள் விசைத்தறி தொழிலுக்கு பிரசித்தி பெற்றவையாகும்.நூலின் விலை விஷம் போல் உயர்ந்து கொண்டு இருக்கிறது. கடந்த சில மாதங்களில் மட்டும் நூலின் விலை 30 விழுக்காடு அளவுக்கு உயர்ந்து விட்டது. உதாரணமாக, 164 ரூபாயாக இருந்த ஒரு கிலோ 60 கோன் நூலின் விலை 224 ரூபாயாகவும், 1,125 ரூபாயாக இருந்த ஒரு கிலோ 2/80 கோன் நூலின் விலை 1,500 ரூபாயாகவும் உயர்ந்துவிட்டது.*

*நூலின் விலை உயர்வு காரணமாக, உற்பத்தியாளர்களுக்கு கட்டுப்படியாகும் விலை கிடைக்கவில்லை. இதனால் உற்பத்தி குறைக்கப்பட்டு தொழிலாளர்களுக்கு வேலை இழப்பு ஏற்பட்டுள்ளது. இந்த சூழ்நிலையில் விசைத்தறி தொழிலை நம்பியுள்ள லட்சக்கணக்கான தொழிலாளர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். உற்பத்தியாளர்களும் பெரும் நஷ்டத்தை சந்திக்க வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.*

*விசைத்தறி நசுங்கிவிடும்*

*ஏற்கனவே மின்வெட்டு காரணமாக பாதிப்படைந்துள்ள நிலையில், இதுபோன்ற நூல் விலை உயர்வு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் உள்ளது. நூல்களின் விலை உயர்வில் நிச்சயமற்ற தன்மை நிலவுகிறது. இதுபோன்று, மாதத்திற்கு இருமுறை நூலின் விலை உயர்ந்து கொண்டே போனால், இந்தத் தொழிலே நசுங்கிவிடும்*

என்று இந்த தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவிக்கின்றனர்.
விசைத்தறி தொழிலுக்கான நூல் விலை உயர்வை கட்டுப்படுத்துவது குறித்து, இந்த துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் உரிய அதிகாரிகளிடம் தெரிவித்தும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுப்பதாக தெரியவில்லை.
நாளை ஆர்ப்பாட்டம்எனவே, நூலின் விலையை குறைக்க நடவடிக்கை எடுக்காமல், விசைத்தறி தொழிலை முடங்கும் அபாயத்திற்கு கொண்டு வந்திருக்கும் தி.மு.க. அரசை கண்டித்தும், விசைத்தறி தொழிலுக்கு, நியாயமான குறைந்த விலையில் நூல் கிடைக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும், அ.தி.மு.க. நாமக்கல் மாவட்ட கழகத்தின் சார்பில், நாளை (செவ்வாய்க்கிழமை) காலை 10 மணியளவில், பள்ளிப்பாளையம் பஸ் நிலையம் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும். இந்த கண்டன ஆர்ப்பாட்டம், கழக அமைப்பு செயலாளர் சு.முத்துசாமி தலைமையிலும், நாமக்கல் மாவட்ட கழக செயலாளர் பி.தங்கமணி எம்.எல்.ஏ. முன்னிலையிலும் நடைபெறும். இவ்வாறு ஜெயலலிதா கூறியுள்ளார்.

## உத்தரபிரதேசம்: சர்க்கரை உற்பத்தி 41.60 லட்சம் டன்னாக அதிகரிக்கும்

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு லக்னோ
உத்தரபிரதேச மாநிலத்தில், நடப்பு சர்க்கரை பருவத்தில் (அக்டோபர் – செப்டம்பர்), 41.60 லட்சம் டன் சர்க்கரை உற்பத்தியாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, கடந்த ஆண்டு சர்க்கரை உற்பத்தியை விட ஒரு லட்சம் டன் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.
இது குறித்து உத்தரபிரதேச மாநில கரும்புத் துறை ஆணையர் சுதிர் எம்.பொபாதே கூறும்போது, “மாநிலத்தில் சுமார் 129 சர்க்கரை ஆலைகள் உள்ளன. இவற்றுள் பல ஆலைகள் செயல்படாமல் உள்ளன. இந்த நிலையில், நடப்பு பருவத்தில் சர்க்கரை உற்பத்தி இலக்கு எட்டப்படும். இதுவரையிலுமாக 3.97 கோடி டன் கரும்பு அரவைக்கு வந்துள்ளது. இதன் வாயிலாக, இதுவரை 35.26 லட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது” என்று தெரிவித்தார்.
மாநிலத்தில், சென்ற ஆண்டு கரும்பு சாகுபடி பரப்பளவு 32,000 ஹெக்டேராக இருந்தது. இது, நடப்பு சர்க்கரை பருவத்தில் 48,000 ஹெக்டேராக அதிகரித்துள்ளது. ஆக, கரும்பு சாகுபடி பரப்பளவு 16 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாக அதிகரித்துள்ளது.

## குன்னூர் தேயிலை ஏல மையத்தில் 50 சதவீத தேயிலை தூள் தேக்கம் விவசாயிகள் கவலை

குன்னூர், பிப்.22–
குன்னூர் தேயிலை ஏல மையத்தில் 50 சதவீத தேயிலை தூள் தேக்கம் அடைந்தது. இதனால் தேயிலை விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்கள் கவலை அடைந்து உள்ள னர்.
ஏலம்
வாரந்தோறும் வியாழன், வெள்ளி இரு நாட்கள் குன்னூர் தேயிலை ஏல மையத்தில் தேயிலை தூள் ஏலம் நடைபெற்று வருகிறது. இந்த ஏலத்தை குன்னூர் தேயிலை வர்த்தகர் அமைப் பினர் நடத்தி வருகின்றனர்.
விற்பனை எண் 7–க்கான தேயிலை ஏலம் கடந்த 18, 19 ஆகிய தேதிகளில் நடைபெற் றது. ஏலத்திற்கு மொத்தம் 15 லட்சத்து 66 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது. இதில் 10 லட்சத்து 41 ஆயிரம் கிலோ இலை ரகமாகவும், 5 லட்சத்து 25 ஆயிரம் கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது.
விலை வீழ்ச்சி
ஏலத்தில் உள்நாட்டு மற்றும் வெளி நாட்டு வர்த்தகர்களின் பங்களிப்பு மிகவும் குறைவாக இருந்தது. தேயிலை தூளுக்கு கிராக்கி இல்லாததால் ஏலத்தில் அனைத்து ரக தேயிலை தூளுக்கும் 3 ரூபாய் விலை வீழ்ச்சி ஏற்பட்டது. தேயிலை ஏலத்தில் கிராக்கி இல்லாத காரணத்தால் 50 சதவீத தேயிலை தூள் தேக்கம் அடைந்தது. இந்த ஆண்டில் இது வரை நடைபெற்ற 7 ஏலங்களில் இந்த முறை தான் அதிகளவில் தேயிலை தூள் தேக்கம் அடைந்தது என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

*இலை ரகம்*

*சி.டி.சி. ரக தேயிலை தூளின் உயர்ந்த பட்ச விலையாக 137 ரூபாயாகவும், ஆர்தோடக்ஸ் தேயிலை தூளின் உயர்ந்த பட்ச விலையாக 191 ரூபாயும் இருந்தது.*

*இலை ரகத்தின் சாதாரண வகை 56 ரூபாய் முதல் 60 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 85 ரூபாயில் இருந்து 116 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.*

*டஸ்ட் ரகம்*

*டஸ்ட் ரகத்தின் சாதாரண வகை 55 ரூபாயில் இருந்து 59 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 90 ரூபாயில் இருந்து 122 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.*

*விற்பனை எண் 8–க்கான ஏலம் வருகிற 25, 26 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது. மொத்தம் 15 லட்சத்து 8 ஆயிரம் கிலோ தேயிலை தூள் ஏலத்திற்கு வருகிறது.*

*கலக்கம்*

*50 சதவீதம் தேயிலை தூள் தேக்கம் அடைந்ததால் உற் பத்தியாளர்கள், விவசாயிகள் மத்தியில் கலக்கம் ஏற்பட்டு உள்ளது. தேயிலை தூள் விற்பனை விலையை அதி கரித்து தர மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க கோரிக்கை எழுந்துள்ளது.*

## கொலக்கம்பை பகுதிகளில் விவசாய பயிர்களுக்கு 'ஸ்பிங்லர்' மூலம் தண்ணீர் பாய்ச்சும் பணி



கொலக்கம்பை பகுதியில் உள்ள விவசாய நிலங்களில் ஸ்பில்லர் மூலம் தண்ணீர் பாய்ச்சப்படுவதை படத்தில் காணலாம்.

கொலக்கம்பை, பிப்.22–

கொலக்கம்பை பகுதியில் கடும் வெயில் காரணமாக காய்கறி பயிர்களுக்கு ஸ்பிங்லர் குழாய் மூலம் தண்ணீர் பாய்ச்சும் பணி நடைபெற்று வருகிறது.

விவசாய நிலங்கள்

கொலக்கம்பை மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங் களான டெராமியா, தூதூர் மட்டம், கரும்பாலம், சட்டன், கிளிஞ்சடா, பாலாடா, தேவர் சோலை, அதிகரட்டி, முட்டிநாடு, கொல்லிமலை போன்ற பகுதிகளில் சுமார் 50 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் மலை தோட்ட காய்கறி விவசாய நிலங்கள் உள்ளது.

இந்த விவசாய நிலங்களில் விவசாயிகள் மலை தோட்ட காய்கறிகளான பீன்ஸ், கேரட், கோஸ், உருளைக்கிழங்கு, மேராக்காய், பீட்ரூட் உள் ளிட்ட பல்வேறு வகையான காய்கறிகளை விவசாயம் செய்து வருகின்றனர்.

விற்பனை

இந்த காய்கறி செடிகளுக்கு 2 நாளுக்கு ஒருமுறை தண்ணீர் பாய்ச்சப்பட்டு, உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள் தெளிக்கப்படுகிறது. காய்கறி கள் விளைந்ததும் அறுவடை செய்து மேட்டுப்பாளையம், ஊட்டி போன்ற இடங்களுக்கு கொண்டு சென்று விற்பனை செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் கொலக் கம்பை பகுதிகளிலும் கடந்த சில வாரங்களாக பகல் நேரங்களில் சமவெளி பகுதிக்கு ஈடாக கடுமையான வெயிலும், மாலை நேரங்களில் கடுமையான குளிரும், காலை நேரங் களிளிலும் உறைபனி பொழிவும் அடிக்கிறது.

ஸ்பிங்லர் குழாய்

இதனால் கொலக்கம்பை சுற்றியுள்ள வனப்பகுதி விவசாய நிலங்கள் நீரின்றி வறண்டு காணப்படுகிறது. நீரோட்டம் உள்ள ஆறு, குளம், அணைகளில் நீர் வரத்து குறைந்துள்ளது.

இதனால் மலை தோட்ட காய்கறி நிலங்களில் விவசாயம் செய்துள்ள பயிர்கள் போதிய நீரின்றி வருகின்றன.

இதனால் பயிர் களை காக்க விவசாயிகள் ஸ்பிங்லர் குழாய் மூலம் தண்ணீர் அடித்து வருகின்ற னர்.

கடுமையான வெயில் அடிப்பதால் ஒரு நாள் விட்டு நாள் தண்ணீர் அடித்து பயிர்களை காத்து வருகின்ற னர்.

மேலும் இதே போன்று தேயிலை செடிகளுக்கு தண்ணீர் பாய்ச்சப்படுகிறது. மேலும் வனப்பகுதிகள் வறண்டு போனதால் விரை வில் காட்டுத்தீ பிடிக்கும் அபாயம் உள்ளது.